# சம்மாந்துறை பிரதேச சபையின் 05 வது பொது கூட்டறிக்கை 2018.07.10

சம்மாந்துறை பிரதேச சபையின் 05 ஆவது அமர்வு 2018.07.10 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். ஏ.எம்.எம் நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. திரு. வீ. ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப். ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப். எஸ்.எம்.எம். முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப். ஏ. அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. ஜனாப். யூ.எல். அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. திருமதி. ஆர். வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 08. திரு. என். கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப். ஏ.சி. முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப். எம்.ரீ. பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப். ஏ.எம்.எம் றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப். ஏ.எல்.எம். ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப். எஸ். நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. ஜனாப். ஏ. யூசுப் லெப்பை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி. கே.எம். இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி. எம்.எஸ். சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி. எஸ்.எம். சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி. கே.எல். சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 19. ஜனாப். வை.பீ.எம். முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். ஐ.எல்.எம். மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப். எம் ஏ.கே. முஹம்மட் | செயலாளர் |
| 02. செல்வி. ஏ.எல். நுஸ்றத் பானு | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் இந்த 05 வது அமர்வுக்கு வரவேற்றவனாக, இந்த அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இந்தக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் பிரேரித்து ஆமோதிக்கலாம்.

நமது கௌரவ உறுப்பினர் ILM.மாஹிர் அவர்கள் இன்றய சபைக் கூட்டத்திற்கு வருகைதர முடியாதென்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார். அவருக்கு லீவு வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.எம் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

இன்றய நிகழ்ச்சி நிரலில் பல முக்கியமான விடயங்கள் கலந்துரையாட வேண்டி இருப்பதனால் அனுமதிக்கான விடயங்களை முடித்து விட்டு அமர்வுக்குப் போவோம்.

**தீர்மானம் 01**

சென்ற மாதக் கூட்டறிக்கையினை ஏற்றுக் கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவஉறுப்பினர் | கே.எல். சிஹாமா |
| ஆமோதித்தவர் | : கௌரவஉறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**தீர்மானம் 02**

சென்ற மாதம் 01.06.2018 தொடக்கம் 29.06.2018 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அங்கீகாரம் வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**தீர்மானம் 03**

அல் - மர்ஜான் முஸ்லிம் மகளிர் வித்தியாலையம் முன்பாக **"நடைபாதையில் விளம்பரம் செய்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது"** என்ற விளம்பரப் பலகை இடுவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இதற்குக் காரணம் தொடர்ந்து பாடசாலை நிர்வாகம் பாடசாலை நடைபாதை தொடர்பாக நாம் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை நிவர்த்தி செய்யவேண்டியதற்காக இத்தீர்மானம் எடுக்கப்படுகின்றது.

**Compactor:** இது கிட்டத்தட்ட 06 தடவைகள் கிளச் பிளேட் பிரசர் பிளேட் போயுள்ளது. ஒரு வாகனத்தில் ஒரு வருடம் அல்லது ஒன்றரைவருடத்திற்கு ஒரு தடவை கிளச் பிளேட் பிரசர் பிளேட் போவதென்றால் ஏதே ஒரு காரணம் இருக்க வேண்டும். அதாவது Housing இல் பிரச்சினை இருக்க வேண்டும் அல்லது சாரதியில் பிரச்சினை இருக்க வேண்டும். இதனைத் திருத்துவதற்கு நமது நிபுனத்துவக் குழவின் ஆதரவு தேவை. இன்று அல்லது நாளைக்குள் அதனுடைய Record ஐப் படித்து முடிவெடுத்தால் இலகுவாக இருக்கும். ஏனென்றால் Compactor இல்லாவிட்டால் பாரிய பாதிப்பு ஏற்படும். 04 அல்லது 05 Tractor Load அதற்குள் போவதனால் அதற்கு எவ்வளவு செலவு ஏற்பட்டாலும் அதனைத் திருத்த வேண்டும். ஆனால் மீண்டும் இவ்வாறான பிரச்சினைகள் வராமல் தவிர்க்க வேண்டும். அதற்காக நிபுனத்துவ குழுவில் உள்ள 03 உறுப்பினர்களும் தயவு செய்து அமர்வு முடிந்தவுடன் கோவையைப் பார்த்து ஒரு முடிவு எடுத்துத்தாருங்கள். உங்களது முடிவுக்கு அமைய இதனைத் திருத்துவதற்கு சபை தீர்மானம் செய்யலாம்.

**தீர்மானம் 04**

LI - 3269 இலக்கமுடைய Compactor இல் கிளச் பிளேட், பிறசர் பிளேட், பிறேக் ஜம், கைபிறேக் போன்றவைகளை திருத்தும் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வை.பீ.எம். முஸம்மில் |

**தீர்மானம் 05**

பின்தங்கிய உள்ளூராட்சி சபைகளின் வருமானங்களை ஊக்குவிக்கும் செயற்திட்டத்திற்கமைய ஏற்கனவே 02 வேலைத்திட்டங்களுக்கான முன் மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் ஒரு வேலைத்திட்டமான மல்வத்தை பொதுச் சந்தையை புனர்நிர்மானம் செய்வதற்கு 17 Million பெறுமதியான முன்மொழிவை சமர்ப்பிக்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நீங்கள் பத்திரிகை, வானொளி, தொலைக்காட்சி போன்றவைகளின் மூலம் அறிந்திருப்பீர்கள், அரசாங்கம் கிராம அபிவிருத்தி வேலைகளை ஆரம்பித்துள்ளனர். ஆனால் சகல கிராம அபிவிருத்தி வேலைகளையும் பிரதேச செயலகங்கள் மூலமாகத்தான் செய்யப்பட உள்ளது. பிரதேச சபை என்ற ரீதியில் நாம் உடன் போக முடியாது. ஏனென்றால் நமது அதிகாரத்தை நாம் விட்டுக்கொடுப்பது சிறந்ததல்ல.

இந்த சபை இந்த நடவடிக்கையை அதாவது அதிகாரப் பகிர்வுக்கு எதிராக பிரதேச சபைக்குரிய கடமைகளை மத்திய அரசு பிரதேச செயலகங்கள் மூலமாக செயற்படுத்துவதை நாம் கண்டிக்கின்றோம். என்ற தீர்மானம் எடுத்து அனுப்புவோம். இது இன்று மட்டுமல்ல போன அரசிலும் நடந்தது. நாங்கள் பிரச்சினையிட்டு 52 பாதைகள் சபைக்கு எடுத்து சபை மூலமாக செய்யப்பட்டது. அரசாங்கத்தின் சகல பங்காளிகளும் நடாத்தும் சபை. இந்த சபை அப்படியான முயற்சியை எதிர்க்கின்றது என்ற தீர்மானத்தை நான் முன்வைக்கின்றேன். சபையின் அங்கீகாரத்தை அதற்கு கோருகின்றேன்.

**தீர்மானம் 06**

கிராம அபிவிருத்தி வேலைகளை (''கம் பெரலிய'') அதிகாரப் பகிர்வுக்கு முரணாக பிரதேச சபைக்குரிய கடமைகளை மத்திய அரசு பிரதேச செயலகங்கள் மூலமாக செயற்படுத்துவதை கண்டித்து சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.எம் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

சபைக்குச் சொந்தமான பல சொத்துக்கள் பராமரிக்கப்படாமல் இருக்கின்றது. இது தொடர்பாக மும்முரமாக இருந்தவர் கௌரவ உறுப்பினர் நஜீம் அவர்கள். ஆனால் பல காரணங்களால் அவை தொடரவில்லை. நான் உங்களிடம் இருந்து இந்தப் பணியை செய்து முடிப்பதற்காக முன்வருபவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு ஒரு குழுவாக அமைக்கலாம். அந்தக் குழு ஒவ்வொரு இடத்திற்கும் சென்று அவ்விடங்களைப் பார்வையிட்டு, அதற்கு நாம் நிர்வாக ரீதியில் என்னென்ன செய்ய வேண்டுமோ அதனைச் செய்து இந்த வருடத்திற்குள் சொத்துக்கள் எல்லாவற்றையும் சபையின் பெயரில் Vesting Order எடுப்பதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இதற்கு கௌரவ உறுப்பினர் நஜீம் அவர்கள் கண்டிப்பாக இருக்க வேண்டும். ஏனென்றால் போன சபையிலும் அதில் மும்முரமாக இருந்தவர். கௌரவ முஸம்மில் அவர்கள், கௌரவ உப தவிசாளர் ஜெயச்சந்திரன் அவர்கள். இவர்கள் ஆக்கபூர்வமாக செயலாளரிடமிருந்து ஒவ்வொரு இடமாக, ஒவ்வொரு வட்டாரத்திற்குள்ளும் பட்டியல் எடுத்து வட்டார ரீதியில் பாரமெடுத்து ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் பிரித்துக் கொடுத்து அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதாவது புது உறுப்பினர்களுக்குத் தெரியாது செட்டிடவட்டைக்குள் ஒரு பொது மலசலகூடம் இருந்தது. ஆனால் நாம் அதனை இடையில் விட்டுவிட்டோம். இதற்கு சாட்சியாக இருந்தவர் வபாத்தாகிவிட்டார். ஆனால் அந்தப்பயனம் தொடர வேண்டும். ஏனென்றால் இது பொதுச் சொத்து நமது எதிர்கால சந்ததியினர் பயன்படுத்த வேண்டும். எனவே இதற்கு அனைவரும் மும்முரமாக செற்பட வேண்டும். என்பது ஒரு பிரேரனை.

**தீர்மானம் 07**

சொத்துக்கள் எல்லாவற்றையும் சபையின் பெயரில் Vesting Order எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.நஜீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

வீடுகளில் மிருகங்கள் (மாடு, ஆடு) அறுப்பதனால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றது. அதாவது பிரதேச சபையினால் இவைகளுக்கு 150 ரூபா கட்டனம் அறவிட்டு அனுமதி வழங்குகின்றது. ஒரு சிலர் அனுமதி பெறாமலும் வீடுகளில் மிருகங்கள் அறுக்கப்படுகின்றது. அவ்வாறு அறுக்கப்படுகின்ற மிருகங்களின் கழிவுகளை மடுவத்தையில் கொடுக்காமல் வீரமுனைத் தொங்கல் அல்லது செட்டிடவட்டை போன்ற இடங்களில் போடுகின்றனர். இதனால் இனரீதியான வெறுப்பு போன்ற பல பிரச்சினைகள் எழுகின்றது. இதனை நாம் சட்டரீதியாக தடை செய்தாலும், நடைமுறையில் பாரிய சிக்கல்களைக் கொண்டுவரும்.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கான எனது யோசனை. இதனை அங்கீகரித்தீர்களேயானால் அதனை நாம் செயற்படுத்தலாம். அதாவது நாம் அறுவைக்கு அறவிடும் தொகையில் மாற்றம் இல்லை. எவராவது அகீகா, உழுஹியா போன்ற விடயங்கள் எதுவாக இருந்தாலும் மாடு, ஆடு அறுப்பதாக இருந்தால் மடுவத்தைக்குப் போய் செய்வதென்றால் அதனை இனாமாக வழங்க அனுமதி செய்யலாம். இல்லாவிடில் அந்தக்கட்டனத்தோடு 5000 ரூபா திருப்பி வழங்கக் கூடிய வைப்புபன றிசீட் எடுக்க வேண்டும். நீங்கள் அறுக்கும் மிருகத்தின் கழிவை மடுவத்தையில் பாரம் கொடுத்தவுடன், அன்றே 5000 ரூபா வை திருப்பிவாங்க முடியும் என்பது எனது கருத்து. இதனை அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொள்கின்றனர்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.நஜீம் அவர்கள்:**

அஸ்ஸலாமுஅலைக்கும். கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த காலங்களில் பல தடவைகள் பிரதேச சபையூடாக எந்தக் குப்பைகளைக் கொட்ட வேண்டும் என்று நாம் தீர்மானிக்கின்றோம். உடனடியாக அதனை அகற்றுவதென்றால் 500 ரூபா அல்லது 600 ரூபா பணம் வாங்கிவிட்டு குப்பைகளை வாகனத்தைக் கொண்டு எடுக்கப்படுகின்றது. அக்குப்பைகள் எங்கு, எவ்விட்திற்கு போவதென்று கண்காணிப்பதில்லை. இவ்வளவு காலமும் 600 அல்லது 650 வெற் பணத்தை மட்டுமே வாங்குகின்றோம். உதாரணமாக வெள்ளிக் கிழமைகளில் அதிகமான கோழிக்குப்பைகள் வருகின்றது. ஆனால் இவைகள் எங்கு கொட்டுப்படுகின்றது என்று நமக்குத் தெரியாது. அதிகமாக செட்டிடவட்டை, முகைடீன் மாவத்தை, சலாம் பள்ளி வீதி போன்ற இடங்களிளேயே

கொட்டப்படுகின்றது. வீரமுனைக்குப் போவதில்லை. எனவே இதனைக்கட்டுப்படுத்த வேண்டும் என்பது எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதற்கு நாம் என்ன செய்ய முடியும்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதற்கு எனது கருத்து கொம்பெக்டருடன் சேர்ந்தமாதிரி பக்கட் இருக்கின்றது. நாம் பக்கட்களை பேச்சஸ் பன்னி உரிய இடங்களில் நிரந்தரமாக வைக்க முடியும். அதாவது அதிகமான கழிவுகளைப் போடுகின்ற இடங்களில் வைக்கலாம். அது மெசினில் இணைந்து இருப்பதனால் பக்கட்டை எடுத்து பொருத்துவதற்கும் இலகுவாக இருக்கும். இதனை முதற்கட்டமாக செய்யலாம்.

வீடுகளில் மாடு, ஆடு போன்ற மிருகங்கள் அறுப்பவர்கள் பிரதேச சபையில் 1000 ரூபா கட்டனம் செலுத்த வேண்டும். அது போதாது ஆனால், நாம் நமது ஊருக்குச் செய்கின்ற சேவையாக நினைத்து நமது வாகனம் மூலம் இக்கழிவுகளை அகற்றுவதற்கான விளம்பரம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்யும் போது கழிவுகளை வீதிகளில் போடுவதை குறைப்பதற்கான வாய்ப்பு அதிகம் கானப்படுகின்றது
என்பது எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இங்கு எடுக்கப்படுகின்ற திண்மக்கழிவு தொடர்பான விடயங்கள் மாடு அறுக்கப்படுகின்ற விடயங்களுக்கு மட்டுமல்லாமல் ஏனைய கழிவுகளுக்கும் எடுக்கப்பட வேண்டும். எனவே சட்ட ரீதியாக எங்களிடம் அனுமதி பெறப்படுகின்ற உரிய நபருக்கு மாத்திரம் தான் இது சாதகமாக அமையும். எங்களது பிரதேச சபை எல்லை மிகவும் பரந்து விரிந்து இருக்கின்ற படியினால் எங்களிடம் அனுமதி எடுத்து அறுக்கின்ற மாடுகளை விட, அனுமதி எடுக்காமல் அறுக்கின்ற மாடுகள்தான் எமது ஊரில் அதிகமாக அறுக்கப்படுகின்றது. அவ்வாறான கழிவுகளை வீதிகளில் போடுகின்றனர். இதனால் துர் நாற்றம் ஏற்படுகின்றது. இத் துர்நாற்றம் வருகின்ற இடங்களில் இருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டுமாயின் கௌரவ உறுப்பினர் முஸம்மில் அவர்கள் கூறியது போன்று பொதுவான இடங்களில் குப்பைத் தொட்டிகளை வைப்பது சாதகமாக இருக்கும் என்பது எனது கருத்தாகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்களது கருத்துக்களை உள்வாங்கியவனாக, இதில் உள்ள நடைமுறைப் பிரச்சினை தொட்டில்கள் என்றில்லாமல் Tractor பெட்டிகளையே பல இடங்களிலும் மார்கட் முன்னும் வைத்திருந்தோம். இதில் வரும் பிரச்சினைகள் திறந்து காணப்படுவதனால் துர்நாற்றம், காகம் போன்ற பறவைகளின் பிரச்சினை ஏற்படுகின்றது. ஆனால் அதற்கான முயற்சி எடுக்க வேண்டும். பொது இடங்கள் என்று கூறும் போது எவ்விடத்தில் என்பது அடுத்த கேள்வி. உதாரணமாகக் கூறினால் மார்க்கட் முன் Tractor பெட்டி வைத்தோம். ஆனால் கழிவுகளை பெட்டிக்குள் போடாமல் வெளியில் போடுகின்றனர்.

கோழிக்கழிவு பாரிய பிரச்சினை என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் நாம் அதனைப் பற்றி கதைப்பதில்லை. இது தொடர்பாக கோழிக்கடைக்காரர்களிடம் றேட்லைசன் கொடுக்கின்ற நேரம் பிளாஸ்டிக் பகட்கள் வாங்கிக் கொடுக்கின்றோம். அந்த பகட்களில் இடவேண்டும். றேட்லைஸன்ஸ் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு கடைகளிலும் ஒரு நாளைக்கு 02 தடவைகள் கழிவுகளை எடுக்க வேண்டும்.

பொதுவான இடங்களில் பகட் வைப்பதனை நாம் ஆரம்பிக்கலாம். பகட் இல்லாவிட்டாலும் Tractor பெட்டியாவது வைத்து ஆரம்பிக்கலாம். இது தொடர்பான விளம்பரங்களையும் செய்வோம். ஆனால்

நமக்குத் தெரியாமல் களவில் மாடு அறுப்பதென்பது நமக்கு அப்பால்ப்பட்டது. அது பொலீஸ்சுக்குரியது. ஆரம்பகாலங்களில் விதானைமார்தான் இதற்கு பொறுப்பாக இருந்தார்கள். ஆனால் இப்பொழுது உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பொறுப்பை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் மக்கள் இந்த சபை ஒன்றும் செய்யவில்லை என்று விமர்சிப்பார்கள். இது ஒரு சமூகப்பனி. இவ்வாறான விடயங்களைக் கண்டால் அதனை நாம் உடனடியாக நிறுத்த வேண்டும். இதற்கு அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

சில இடங்களில் வெளியில் இருந்தும் கழிவுகள் வருகின்றது. இவைகளைத் தடை செய்வதற்கு நமக்குள் ஒற்றுமை இருக்க வேண்டும். இறைச்சிக் கடைக்காரர்களுடன் பேசும் போது அவர்கள் கூறினார்கள் கல்முனையில் இருந்து சம்மாந்துறை Hotel களுக்கு இறைச்சி வருகின்றதென்று. இவ்வாறு செய்பவர்களுக்கு லைசன்ஸ் வழங்கப்படுவதில்லை. ஆனால் இறைச்சி வருகின்றது. அதனைத் தெரிந்தும் தடைசெய்யாமல் இருக்கின்றோம். இவைகளை சமூகம் கண்டிக்காவிட்டால் ஒன்றும் செய்ய முடியாது. இதற்கான முயற்சி எடுப்போம். OIC யையும் கூப்பிட்டு பேசி அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பொதுவாக குப்பைகள் போடும் இடங்கள் என்று கூறும் போது கைகாட்டி, செட்டிட வட்டை, போன்ற இடங்களை உபயோகிக்கின்றனர். வழமையாக இவ்விடத்தில்தான் மாடு, ஆடு, கோழிக் கழிவுகள் வருகின்றது. நாம் இவ்விடங்களில் பகட்களை வைத்தோமானால் இலகுவாக கட்டுப்படுத்தலாம். இது பற்றி விளிப்பனர்வூட்டும் துண்டுப்பிரசுரங்கள் மக்கள் மத்தியில் வெளியிட வேண்டும் என்பது எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இவர்கள் கூறிய கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளக்கூயவைகள் தான். அதுமட்டுமல்லாமல் சென்னல் சாஹிறா பாடசாலை அருகாமையிலும், சிலகிட சந்தி, வீரமுனைக்கு போகும் இடத்திலும், உதுமாலெப்பை ஆசிரியரின் வயல் ஓரத்திலும், கைகாட்டியில் உள்ள மையவாடி அருகிலும் கழிவுகளைப் போடுகின்றனர். எனவே இவ் இடங்களையும் உள்வாங்கவேண்டும். இவைகள் முக்கியமாக செய்யப்பட வேண்டிய வேலைகளாகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் சொறிக்கல்முனை வீதியில் வைக்க முடியாது. ஏனென்றால் அங்கு வாழ்கின்ற மக்களை துன்புறுத்துவதாக இருக்கும். மாடு அறுக்கும் எல்லைக்குள்ளே வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அந்த இனத்தை மதிக்கின்ற செயலாக நடக்காது. அதனைத் தடை செய்ய வேண்டும். இதற்கு தீர்மானம் மேற்கொள்ளுங்கள்.

**தீர்மானம் 08**
கழிவுகள் வீசும் பிரதானமான இடங்களை இணங்கானப்பட்டு அவ்விடங்களில் பக்கட்கள் வைத்து கழிவுகளை சேகரிப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.எம் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வை.பீ.எம். முஸம்மில் |

**Sports Complex:** பொதுவாக இதில் திருமண வைபவங்கள் சங்கங்களின் நிகழ்வுகள், வலீமா போன்ற நிகழ்வுகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறான நிகழ்வுகழுக்கு பல இலட்சங்கள் செலவு செய்து கொட்டில்கள் அடிக்கப்படுகின்றது. அவ் அமைப்பை சபையின் சொத்தாக எடுப்போமேயானால் அதன் மூலம் வருமானம் மட்டுமல்ல 02 பேருக்கு தொழிலாகவும் அமையும். இதற்கு சபையில் தீர்மானம் எடுப்போம். இருக்கும் இடங்களுக்கு பொருத்தமான கொட்டில்களை சபையினால் எடுத்து (கொட்டில், மேசை, கதிரை) செய்வதற்கு தீர்மானம் எடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.நஜீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கொட்டில் மேசை கதிரை என்று சொல்லி சம்மாந்துறையில் உள்ள தொழில் வாய்ப்புக்களை நாம்தான் எடுக்க வேண்டுமா? மற்ற யாரும் எடுக்க முடியாதா? என்ற சந்தேகம் வருகின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதற்கான விளக்கம், நாம் யாருடைய தொழிலையும் பாதிப்படையச் செய்வதில்லை. நமது ஊரில் அப்படியான சேவை இருப்பதாக நான் காணவில்லை. இது வெளியூரில் இருந்துதான் வருகின்றது. உங்கள் கருத்தை நான் உள்வாங்குகின்றேன். ஆனால் நாம் ஒரு சேவையை செய்யும் போது உதாரணமாக, அப்துல் மஜீட் மண்டபத்திற்கு கதிரை தேவை அதற்கு அதனை வாங்கி வைத்திருக்கின்றோம். வெளியில் வியாபாரம் செய்கின்றார்கள் என்பதனால் கதிரை வாங்க முடியாமல் இருக்க முடியாது. அது போல் Sports Complex சபையின் சொத்து. இடம் இருப்பதனால் அங்கு அதனைச் செய்யமுடியும்.

இதற்குக் காரணம் சபையின் வருமானம் போதாமல் உள்ளது. சென்ற சபையில் சேர்த்த வருமானத்தில்தான் இன்னும் இச்சபை இயங்கிக் கொண்டிருக்கின்றது. 50 இற்கு மேற்பட்ட ஊழியர்களுக்கு மாதாந்த சம்பளம் கொடுக்க வேண்டும். Telephone Bill, Water Supply Bill, Electricity Bill கட்ட வேண்டும். எல்லாவற்றுக்கும் ஒவ்வொரு மாதமும் கிட்டத்தட்ட 30 இலட்சம் ரூபாவிற்கு மேல் பணம் தேவைப்படுகின்றது. சட்டத்தை ஒழுங்காகப் படித்தீர்களேயானால் உங்களுக்கு விளங்கும். வருமானத்தை ஈட்டுவது இந்த சபையின் ஒரு பொறுப்பு.

சபை என்று சொன்னால் நான் மட்டுமல்ல அங்கத்தவர்கள் அனைவரையும் குறிக்கும் எப்படி இந்த சபைக்கு வருமானம் திரட்டலாம்? என்றால் அதற்குரிய வழிகளைத் தேடி வருமானத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த சபையினால் மக்களுக்கு சேவை செய்வதற்கு பணம் வேண்டும். அரச ஊழியர்களைத் தவிர வேறு எவருக்கும் அரசாங்கம் கொடுப்பனவு வழங்காது. மற்ற அனைத்துக்குமான செலவீனங்களுக்கும் சபையினாலேயே செய்ய வேண்டும். நான் எனது சொந்த வாகனம் ஓடுவது பெருமைக்கல்ல. சபை வாகனத்தைப் பயன்படுத்தினல் அதற்கான எரிபொருள் சபையினால் வழங்கப்படுகின்றது. செலவீனத்தை மீதப்படுத்துவதற்காகவே இது மேற்கொள்ளப்படுகின்றது.

**கௌரவ உறுப்பினர் என். கோவிந்த சாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களுடைய பிரதேச சபை 1917 ஆம் ஆண்டில் தமிழ் விடுதலைப் போராட்டத்திலிருந்து விடுதலை பெற்றவர்கள். தாங்கள் தங்களையே ஆள வேண்டும் என்று கோசமிட்டதற்கினங்க அந்தக் காலத்திலே ஜனாதிபதியாக இருந்த JR.ஜெயவர்தன அவர்கள் இந்தபிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டும் என்று அந்தக்காலத்திலே சிந்தித்ததற்காக ஒரு திட்டத்தை கொண்டுவந்தனர். அந்த திட்டம்தான் பிரதேச சபை, மாகாண சபை, மாவட்ட சபை, கிராமோதய சபை. இந்த நான்கு சபைகளும் ஒரே சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டவை. இது போன சபை அவர்வில் எனது கன்னியுரையில் குறிப்பிட்டிருந்தேன்.

நமது சபையின் நோக்கம் நிதியை ஈட்டுவது அந்தவகையில் அம்பாரையில் உனவகம் என்று ஒரு கென்டீன் நடாத்துகின்றார்கள். இது பலவகையிலும் வருமானத்தை ஈட்டுகின்றதனால் அதனைக் கொண்டு செலவு செய்கின்றனர். அதே போல் மட்டக்களப்பு மாநகர சபையிலும் நாச்சியார் பாரம்பரிய உணவகம் என்றும் ஒரு கென்டீன் நடாத்தப்படுகின்றது. எங்களது ஊரக்கும் நீங்கள் கூறியது பொருத்தமானது என்பது என்து கருத்து அதனை நாங்கள் கட்டாயம் செய்ய வேண்டும் என்பது எனது தாழ்மையான கருத்து.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் நஜீம் அவர்கள் கூறியதை உள்வாங்கியவனாக இச்சபையின் வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கு சபைக்குச் சொந்தமான இடம் என்பதனால் Sports Complex இல் அதனை நிறுவுவது நல்லம். இருந்தும் நாங்கள் எங்களது பொதுமக்களையும் கவனத்தில் கொண்டு அவர்கள் அவ்விடத்தில் அமைக்க வேண்டும் என்று எமது ஊர் மக்களுக்கும் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்பது சிறந்தது என்று எனது ஆலோசனையாக கூறுகின்றேன்.

ஏனென்றால் மக்கள் கூறலாம் சபை ஒன்று வந்ததனால் புதிய உறுப்பினர்கள் கூடி எங்களது உழைப்புக்களில் மன்னள்ளிப் போட்டு விட்டார்கள் என்று எங்களைப்பற்றி தப்பபிப்பராயம் கொள்ளலாம் என்பதற்காகத்தான் கௌரவ உறுப்பினர் நஜீம் அவர்கள் இதனை விளக்கமாக கூறியிருக்கின்றார். எனவே இதனைச் செய்வது நல்ல விடயம். அதே நேரம் பொது மக்களின் தேவைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது சபை ஆரம்பிக்கப்பட்டு தற்போது 5 வது கூட்டத்தொடர் நடைபெறுகின்றது. இதுவரையில் எமது சபை அமர்வுகளின்படி எமது சபையைக் கொண்டு நடாத்துவதற்கான வருமானத்தை ஈட்டுகின்ற எந்தவிதமான வேலைத்திட்டங்களும் எமது சபையினால் நடைமுறைப்படுத்தவில்லை. உண்மையில் எனது மனதிற்குள் நீண்டநாட்களாக இருந்த சம்பவம். இன்று அதற்குரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. தொடர்ந்து இந்த சபை செலவீனங்களையும் செலவுக்கான வழிமுறைகளையும் முன்னெடுக்கின்றதே தவிர வருமானத்தை ஈட்டுகின்ற வழிகளை எந்த வகையிலும் ஒரு நிகழ்ச்சித்திட்டங்களையும் முன்னெடுக்க வில்லை.

உள்ளூர்வாசியாக இருந்தாலும், வெளியூர்வாசியாக இருந்தாலும் யாராக இருந்தாலும் தனிநபர்களின் வியாபாரத்திற்கு எந்தத்தடையும் வரக்கூடாது. தற்போது வியாபாரங்கள் அனைத்தும் போட்டிநிறைத்ததாக கானப்படுகின்றது. எங்களது நோக்கம் சபைக்கு வருமானம் ஈட்டுவதுதான் அதற்குப் பிறகுதான் செலவீனங்களைப்பற்றி சிந்திக்க வேண்டும். இங்கு செலவீனங்கள் முதலாவதும் வருமானத்தைப்பற்றி கதை இல்லாமல் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

எனவே என்ன தொழிலாக இருந்தாலும் கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் உதாரணத்திற்கு சில விடயங்களைச் சுட்டிக்காட்டினார். அதே போன்று இல்லாவிட்டாலும் எங்களுக்குப் பொருத்தமான அடிப்படையிலும், வருமானத்தை ஈட்டுகின்ற வேலைகளை இனிமேலாவது நாங்கள் முன்னெடுக்க வேண்டும் என்று கூறுவதோடு கௌரவ தவிசாளர் அவர்கள் முன்வைத்த கொட்டில் தொடர்பான விடயத்திற்கு எனது ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நன்றி.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் இந்தக் கொட்டில்களை எடுப்பதற்குக் காரணம் அதன் வாடகை ஒரு நாளைக்கு இலட்சக்கனக்கில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுதான். நீங்கள் கூறியது போல் அவ்விடம் பொருத்தமானதாக இருக்கின்றது. அளவுகளுக்கேற்ப வாடகையைப் பெற்றுக்கொள்ள முடியும். அதே போன்று நகரமண்டபத்தைத் தாண்டி வருகின்ற நிகழ்வுகளுக்கும் அதற்குப் பொருத்தமான கொட்டில்களை அடித்து பிரயோசனப்படுத்தலாம்.

ஆனால் இதற்கு அப்பால் நான் கூறவேண்டியது என்னவென்றால் நமக்கு வருமானம் ஈட்டுகின்ற சட்டரீதியான விடயங்கள் முடங்கிக் கிடக்கின்றது. உதாரணத்திற்கு எங்களது ஆதன வரியை எடுத்துக் கொண்டாலும் சம்மாந்துறையில் இருக்கின்ற வீடுகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. வரி அறவீடு செய்யாத பகுதியில் அறவீடுகளை மேற்கொள்ள வேண்டும். சாதாரனமாக 100 அல்லது 200 ரூபா அறவிட்டால் கூட நமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும் ஆளனிகளை வளப்படுத்தி இதனை மேற்கொள்ள வேண்டும். பெரிய கட்டனமாக இருந்தாலும்

உத்தேச மதிப்பீட்டுக் கட்டனத்தை அறவிட வேண்டும். சிலப் போட்ட வீடுகளின் அடிப்படையிலும் வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடியும். நாம் இதனை ஒவ்வொரு உறுப்பினரும் பாரமெடுத்து செய்ய வேண்டும்.

சிலர் எல்லா சட்டங்களையும் நம்மிடம் பிரயோகிப்பார்கள். ஆனால் பிரதேச சபைக்கு எந்த விதத்திலும் கட்டனங்களையும் செலுத்தாதவராக இருப்பார். உண்மையாக ஒரு இடத்தில் கேட்கும் போது, அவருக்கும் கடப்பாடு இருக்க வேண்டும். எந்தக் கடப்பாடும் இல்லவாதவர்தான் அதிகமாக நம்மிடம் குறை கண்டுகொண்டிருப்பார்கள். அவர்களையும் உள்வாங்கி அறவிட வேண்டும். எங்களது வளத்தைக் கூட்ட வேண்டும். நமது ஊர் 02 பிரதேச சபைகளை கொண்டிருக்க வேண்டிய ஊர். ஆனால் ஒரு பிரதேச சபையைத்தான் வைத்திருக்கின்றோம். காரணம் குறிப்பிட்ட சில இடங்களில் இருந்து வருமானம் வருகின்றது. சில இடங்களில் இருந்து வருமானம் வருவதில்லை. எமது சம்மாந்துறை பிரதேசத்தில் உள்ள அனைத்து கிராமங்களையும் வளப்படுத்துவதற்கு வரி அறவீடு செய்வது அவசியமானதொன்றாகும்.

எங்களது வருமானத்தில் நிதி திரட்டி நாம் எப்படி செலவு செய்வது என்ற சபைதான் இது. இதற்கு நமக்குக் கிடைத்திருக்கின்ற வாய்பை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். இவைகளுக்கு நாம் எதிர்ப்புத் தெரிவித்து எமக்குள் பேதங்கள் வராமல் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். யார் என்ன செய்தாலும் நமது வளங்களை நாம் பயன்படுத்த வேண்டும். மல்வத்தை வளத்தாப்பிட் கிராமங்களையும் வளப்படுத்தி வரி அறவிட வேண்டும். 1987 ஆம் ஆணடு இலங்கை இந்தியா ஒப்பந்தம்தான் எமக்கு இந்த சபைகிடைத்தது. எங்களுக்கு சட்டம் இருக்கின்றது. எங்களுக்குள் நாங்களே நிர்வகிக்கின்ற பாராளுமன்றம்தான் நமது சபை.

நமது அதிகமான வயல் நிலங்கள் செய்படாமல் கிடக்கின்றது. கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களின் திட்டத்திற்கமைய ஜப்பான் நகரத்தை இணைக்கும் திட்டத்தில் எமது அல்லை நீரை பம் செய்து வீடக்கொடவுக்கு அப்பால் உள்ள குழத்தில் நிரப்பிவிட்டு மீண்டும் அந்த நீரை வண்டு வாய்காலில் செலுத்தி வேளான்மைம செய்யலாம். நமது திட்டத்தை நாமே முன்னெடுக்க வேண்டும்.

அத்தோடு தவிசாளர் கொண்டு வந்த கொட்டில் விடயம் வரவேற்கத்தக்கது. அதற்கு அனைவரும் ஆதரவு வழங்கி செயற்படுத்த வேண்டும். எல்லோரும் ஒற்றுமைப்பட்டு இந்த சபையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**தீர்மானம் 09**

Sports Complex இல் இருக்கும் இடங்களுக்கு பொருத்தமான கொட்டில்களை சபையினால் செய்து (கொட்டில், மேசை, கதிரை) வாடகைக்கு வழங்குவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.எம் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு நன்றி. நீங்கள் கூறியவாறு இந்த சபையின் இரண்டாவது அமர்விலேயே வரியைப்பற்றி நாம் முடிவெடுத்து, இன்று 06 ஊழியர்கள் இளைப்பாறிய நமது ஊழியர் றசூல் அவர்களின் தலைமையில் வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றது. தற்போது 25 கிராம சேவகர் பிரிவுதான் வரி அறவீட்டுக்குள் வருகின்றது. இன்ஷாஅல்லாஹ் இன்னும் 06 மாத காலத்திற்குள் 35 கிராம சேவகர் பிரிவுகள் உள்வாங்கப்படும்.

அதே நேரம் திண்மக்கழிவு அகற்றும் சகல பகுதிகளிலும் மாதாந்த கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். நிர்வாகம் இல்லாத காலத்தில் அது நிறுத்தப்பட்டது. அதனை மீண்டும் ஆரம்பிக்க

நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதனால் சபையின் வளங்களை மேம்படுத்துவதற்காக அதற்குத் தேவையன உபகரணங்களை வாங்குவதற்கு சபை முடிவெடுக்கின்றது.

**தீர்மானம் 10**
வரிப்பணம் அறவிடாத திண்மக்கழிவு அகற்றும் சகல பகுதிகளிலும் நிறுத்தப்பட்டிருந்த மாதாந்த அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ். நளீம் |

உங்களுக்குத் தெரியும் நமது வரவு செலவுத் திட்டம் சென்றமாதம் ஆரம்பித்திருக்க வேண்டும் இதில் மக்கள் பங்களிப்பும் கட்டாயமாக வரவேண்டும். அதனால் இந்தமாத இறுதிக்குள் சகல அங்கத்தவர்களுக்கும் இந்த வருடத்தின் வரவு செலவுத்திட்டம் 06 மாத முடிவில் அதன் நிலுவையும் உங்களுக்குத் தரப்படும். அதனை மையமாக வைத்து செயலாளர், நிதி உதவியாளர் இவர்களின் உதவியோடு ஒவ்வொரு வட்டாரத்திலும் நாம் இந்த அமர்வுகளை நடாத்த வேண்டும். மக்களுடன் சேர்ந்து இந்த சபையின் வரவு செலவுத் திட்டத்தை எப்படி தயாரிக்க வேண்டும் என்ற கருத்துகளை அவர்களிடம் பெற வேண்டும். அந்த முயற்சியை இன்ஷாஅல்லாஹ் இந்த மாத இறுதிக்குள் ஆரம்பிக்க வேண்டியதாக இருக்கின்றது. அதற்கு உங்களின் ஒத்துழைப்பை நான் நாடுகின்றேன்.

**புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனையற்ற சம்மாந்துறையாக பிரகடனப்படுத்தல்:**
நம்பிக்கையாளர் சபை, சம்மாந்துறை பிரதேச சபைக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கின்றது. இந்த சபை இந்த ஊரில் புகைத்தலையும் போதைப் பொருள் பாவனையையும் தடை செய்ய வேண்டும் என்று. அந்தவகையில் சம்மாந்துறை பிரதேச சபை புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனையையும் தடைசெய்ய பிரகடனம் செய்கின்றது.

புகைத்தலைப் பொறுத்தமட்டில் சிகரட் வியாபாரத்தை நாம் தடை செய்ய முடியாது. இதற்கு கட்டுப் பாடுகள் இருக்கின்றது. பொது இடங்களில் புகைத்தலாகாது என்பது நமது நாட்டின் சட்டம். அந்தச் சட்டத்தை நிலைநாட்டுவதற்காக நமது பொது இடங்கள், அதாவது பொதுச் சந்தை, பஸ் தரிப்பிடங்கள் போன்ற இடங்களில் புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது என்பதை நாம் பிரகடனப்படுத்தி அதனை மீறும் பட்சத்தில், பொது இடங்களில் இருந்து வியாபாரம் செய்பவர்களோ, தொழில் செய்பவர்களோ அவ்விடத்தில் இருந்து அகற்றப்படுவர். உதாரணமாக பொதுச்சந்தையில் மீன் விற்கின்ற வியாபாரி அதற்குள் சிகரட் குடித்தால் அவர் அதற்குள் இருந்து அகற்றப்படுவார். ஏனென்றால் சட்டவிரோதமான ஒன்றுக்கு நாம் உடன்படக்கூடாது. ஆனால் சிகரட் விற்பதை இந்த சபை தடைசெய்ய முடியாது.

அதே போல் போதைப் பொருள் மிகவம் ஆபத்தான விடயம் ஆனால் இன்று இந்த ஊரில் பரவலாகப் பாவிக்கப்படுகின்றது. ஆனால் இன்று இந்த ஊரில் மக்களின் பிரதி நிதிகள் என்ற ரீதியிலும் நமக்கு எது செய்ய முடியுமோ அவை எல்லாவற்றையும் செய்து போதைப் பாவனையை நிறுத்துவதில் முமமுரமாக ஈடுபடுவோம். நான் இந்த சபையில் வேண்டிக் கொள்வது. பொது இடங்களில் புகைத்தல் தடையை மிகவும் கடினமாக நடைமுறைப்படுத்தி நமது பொதுவான இடங்களில் அப்படியாக ஈடுபடுபவர்களுக்கு எதிராக நமது சபை சட்டரீதியான தண்டனை வழங்க வேண்டும். அதனை ஊக்குவிக்க வேண்டும். இந்த சபையின் அங்கத்தவர்கள் வட்டார ரீதியாக ஒவ்வெருவரின் தலைமையில் விளிப்புனர்வு திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு பாடசாலையையும் மையமாக வைத்து அந்தப் பகுதியில் உள்ள பெற்றோர்களை நமது ஊக்குவிப்பில் ஒன்று சேர்த்து நிபுனத்துவர்களின் தலைமையில் அவர்களுக்கு இதன் ஆபத்தைப் பற்றி அறிவூட்டி விளக்குவது இந்த சபையின் கட்டாயக்கடமை. இது நமது முக்கிய கடமை. அதனால் அதனை செய்வதற்கும் இந்த சபை அமர்வின் முடிவில் நம்பிக்கையாளர் சபையின்

அங்கத்தவர்களோடு நமது பிரதிநிதிகளின் பங்களிப்போடு ஒரு பத்திரிகையாளர் மகாநாடு நடாத்தி அதனை நாம் பகிரங்கப்படுத்த வேண்டும். என்ற தீர்மானத்தை சபை எடுக்க வேண்டும். என்று கூறி கௌரவ உறுப்பினர்களின் கருத்துக்களை உள்வாங்குகின்றேன்.

**தீர்மானம் 11**

நம்பிக்கையாளர் சபையின் அங்கத்தவர்களோடு சபை உறுப்பினர்களின் பங்களிப்போடு புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனையற்ற சம்மாந்துறையாக பிரகடனப்படுத்துவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. யூசுப் லெப்பை |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று இலங்கையைப் பொறுத்தமட்டில் பாடசாலை மட்டத்தில் மாணவர்கள் கூட போதைப் பொருளுக்கு அடிமையாவது ஊடகங்கள் மூலம் நாங்கள் நாளாந்தம் அறிகின்றோம். அதே நேரத்தில் இவ்வாறான நிகழ்வு எமது ஊரையும் பாடசாலை மாணவர்களையும் விட்டுவைத்திருக்க முடியாது என்று நான் கருதுகின்றேன். ஏனென்றால் எமது மாணவர்கள் சேர்ந்து படிக்கின்ற போது அவ்வாறான நிகழ்வுகளில் ஈடுபடுகின்றனர்.

குறிப்பாக ஊரின் பிற பகுதிகள் ஓய்வெடுக்கின்ற இடங்களில் இரகசியமான முறையில் நடைபெறுகின்றது. ஊரின் புறபகுதி என்று கூறினால் பைனன்ட கட்டு ஆற்று ஏரியாக்களில் இதற்குரிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக சில நேரங்களில் அறியக்கூடியதாக உள்ளது. எமது ஊரில் எந்த இடங்களில் இவ்வாறான நிகழ்வுகள் நடைபெறுகின்றது என்பதை அறிவதோடு இதற்கு சம்மாந்துறை பொலீசாரின் உதவி மிக முக்கியமானதாகும். சிவில் நிர்வாக அமைப்பொன்று ஒவ்வொரு GS பிரிவுகளிலும் அவ்வாறான குழுக்கள் இருக்கின்றது. அந்தக் குழுக்களில் நானும் இருக்கின்றேன். இவ்வாறான இடங்களைக் கண்காணிப்பதன் மூலம் போதைப் பொருள் அற்ற சம்மாந்துறையை நாங்கள் காணலாம் என்பது எனது கருத்து.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனையற்ற சம்மாந்துறையாக பிரகடனப்படுத்தல் என்ற விடயம் சம்பந்தமாக நம்பிக்கையாளர் சபை இதில் அக்கரை செலுத்துவதற்கு உண்மையில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். நல்லதொரு விடயம் இது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஆனால் இவ்விடத்தில் நீங்கள் ஒரு கருத்தை முன் வைத்தீர்கள் சம்மாந்துறை பொதுச் சந்தையில் சிகரட் புகைத்தல் பாவிப்பதைத் தடுக்க வேண்டும் என்று ஆனால் இவைகள் சிக்கல்களை உண்டுபடுத்தக்கூடிய விடயங்களாகும். ஆகவே அது சம்பந்தமாக சற்று சிந்திக்க வேண்டும். போதைப் பொருட்களைப் பொறுத்தவரையில் எமது வளத்தாப்பிட்டி வட்டாரத்தில் உள்ள கிராமம் பாரிய பாதிப்பினை சந்தித்துக் கொண்டிருக்கின்றது. விசேடமாக அம்பாரைக்கு ''கேஜி'' எனும் கஞ்சா வினியோகிக்கும் இடமாக வளத்தாப்பிட்டி மாறிக் கொண்டிக்கின்றது. அதற்கு மேலதிகமாக சிங்களப் புகையிலை எனும் ஒரு வகை புகையிலையை பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தும் ஒரு நிலை உருவாகியிருக்கின்றது.

அதற்கு மேலதிகமாக ''தம்பாக்கு'' எனும் ஒரு வகையான பாக்கு தயார் செய்து அதனை பொக்கட்டில் வைத்துக் கொண்டு ஒவ்வொருவரும் போதையுடன் திரிவதைப் பார்க்க முடிகின்றது. நல்ல சமூகத்தில், அந்தஸ்துள்ள படித்த மட்டங்கள் கூட இதில் ஈடுபடுகின்றனர். இது ஒட்டுமொத்தமாக எமது சம்மாந்துறையை சீரளிக்கின்றது இந்தத் திட்டத்திற்கு நிச்சயமாக சபையின் பூரண அங்கீகாரத்துடன் மத இஸ்தாபனங்களின் ஒத்துழைப்பும் அத்தியவசியமாகும். ஏனெனில் இதனைக் கட்டுப்படுத்தும் போது நிச்சயமாக பொலீசாரின் உதவி தேவை. அத்துடன் பாரிய எதிர்ப்பை சந்திக்கக்கூடிய ஒரு சூழல் ஏற்படும். இந்த எதிர்பை தன்பிள்ளை தவறான வளியில்

போகின்றான் என்றால் தாய், தந்தையினர் அதனை ஏற்றுக் கொள்வதில்லை. என்னுடைய பிள்ளை அப்படியில்லை என்று வாதாடும் ஒரு சமூகமாக எமது சமூகம் இருந்து கொண்டிருக்கின்றது.

ஆகவே, இந்த எதிர்ப்புக்களுக்கு மத்தியில் அதனை செய்தேயாக வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் இதற்கு பொலீசாரின் உதவி, அதிகாரம் எங்களுக்கு போதாவிட்டால் குறைந்தது STF ஆவது கொண்டு வந்து இதனைக் கட்டுப்படுத்த வேண்டும். என்னைப் பொறுத்தளவிளே வாரத்திற்கு அல்லது ஒவ்வொரு நாளும் இரவு வேளைகளில் வளத்தாப்பிட்டியில் வலம்வரும் வேலைகளைச் செய்தால் நலவாக இருக்கும் என்று எனது சிந்தனையாக இருந்துகொண்டிருக்கின்றது. நேற்றுக் கூட பொலீஸ்மா அதிபருக்கு அல்லது பதில் பொலீஸ்மா அதிபருக்கு ஒரு கடிதத்தை தயார் செய்து விட்டு எதற்கும் எங்களது பள்ளி தலைவர்களை ஊர் பெரியவர்களை வைத்து நமது பிள்ளைகள் தானே இதன் பாதிப்புக்கள் அவர்களை சிக்கல்களுக்குள்ளாகாமல் சீர் செய்ய வேண்டும் என்று நினைக்கின்றேன்.

எனவே, அதன் அடிபமையிலேயே இந் நிகழ்ச்சித் திட்டங்களுக்குள் நடைபெறுவதென்றால் இதன் முதலாவது நிகழ்வை வளத்தாப்பிட்டிக்கு பெற்றுத் தாருங்கள் என்று இந்த சபையிடம் கண்ணியமாகக் கேட்டுக் கொள்கின்றேன். நன்றி!

**கௌரவ உறுப்பினர் ஏ.சி. முஹம்மட் சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உண்மையில் புகைத்தல் மற்றும் போதைப் பொருள் தொடர்பாக பாரிய கரிசனை கொண்டிருக்கின்றது நம்பிக்கையாளர் சபை. கடந்த காலங்களிலே வலயங்களாக பிரிக்கப்பட்டு குழுக்கள் அமைக்கப்பட்டு, அதனூடாக எவ்வாறு கட்டுப்படுத்தலாம். என்ற ரீதியில் செயற்பட்டார்கள். அதிலும் குறிப்பாக எங்களுடைய பிரதேசங்களில் அவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் அது போதியளவு சாத்தியப்படவில்லை. எனவே, பொலீஸூடாக, சிவில் பாதுகாப்புக் குழு ஒன்றை ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் அமைத்திருக்கின்றார்கள். அதனூடாகவும் இதனைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

இன்று செந்நெல் கிராமம் பிரதேசங்களிலே அடர்த்தியான பற்றைப்புதர்கள் இருக்கின்றன. இப் பிரதேசங்களிலே உள்ள காணிகளிளே வியாபாரம் செய்கின்ற சூழ்நிலைகள் ஏற்படுகின்றளது. இன்று வீதிகளிலே கஞ்சா, குடு போன்ற வியாபாரிகள் இரவு வேளைகளில் எங்களது தெரு விளக்குகளை அனைத்து விட்டு இன்று தத்தமது வியாபாரங்களைச் செய்கின்றார்கள். அன்மையிலே நான்கூட இரவு நேரத்தில் செல்கின்ற போது குறிப்பிட்ட ஒரு இடத்தில் பற்றைக்குள் மறைத்து வைத்து விட்டு போகின்றார். அதன் பிற்பாடு வாங்குகின்றவர் அதனை எடுத்துக் கொண்டு செல்கின்றார். இவ்வாறுதான் அவர்களது வியாபாரங்களை செய்து கொண்டிருக்கின்றார்கள்.

நாம் எமது வட்டாரங்களில் இதனைக் கட்டுப்படுத்த வேண்டி ஏற்படுகின்ற வகையால் எங்களுடைய மக்கள் பிரதிநிகளாகிய நாம் பிரதேச ரீதியில் குழுக்களை அமைத்து, இதனைச் செய்யலாம் என நினைக்கின்றேன். எனவே எம்முடைய சபையினாலும் இவ்வாறான செயற்திட்டங்களை செய்வதற்கு அனுசரனைகளை செய்ய வேண்டும் என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம். ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மது போதை அதிகமாக தற்பொழுது சிறுவர்கள் மூலமாக நடைபெறுகின்றது. அல் - அர்சத் பாடசாலையில் உள்ள மலைப்பகுதிகளில் அதிகமான போத்தல்கள் காணப்படுகின்றது. இது பொதுவாக ஊருக்குள் நடக்கின்றது. இதற்குக் காரணம் பொலீஸ் கோட்டுக்கு கேஸ் கொடுப்பதற்காக மட்டும்தான். அவர்களிடமே கேட்கின்றார்கள் இன்றைக்கு எங்களுக்கு கேஸ் தர வேண்டும் என்று. இவ்வாறான ஒத்துழைப்புடன்தான் இவ் வியாபாரம் நடந்துகொண்டிருக்கின்றது. நமது ஊரில் பொலீஸ் கடமை செய்தால்தான் இதனை செய்ய முடியும் இல்லாவிடில் நாம் எத்தனை பேர் முயற்சி எடுத்தாலும் ஒன்றும் செய்ய முடியாது. இப்பொழுது நாங்கள் குறிப்பிட்ட சில பகுதிகளில் மன் அகழ்வு நடைபெறுகின்றது என்று நாம்

பொலீஸில் முறைப்பாடு செய்தால், எங்களுக்குத் தெரியாமல் அவர்களிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு முறைப்பாட்டை கவனத்தில் கொள்வதில்லை. எனவே இதற்கு பொலீஸாரின் ஒத்துழைப்பு அவசியம். அல்லது இந்த ஊருக்கு STF வர வேண்டும். இல்லை என்றால் அதனை செய்ய முடியாது என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அனைத்து உறுப்பினர்களின் கருத்துக்களையும் உள்வாங்கியவனாக, போதைப் பொருள் ஒழிப்பு என்பது இலகுவாக ஒழிக்க முடியாத ஒன்று. எனவே போதைப் பொருள் பற்றிய விளிப்புனர்வூட்டல் துண்டுப்பிரசுரங்களை நாங்கள் விடுவதாலும் இது பற்றிய அறிவுரையை ஒவ்வொரு பாடசாலைகளும், பொது இடங்களிலும் நாம் வழங்குவதற்காக போதைப் பொருள் ஒழிப்பு அதிகாரிகளின் உதவிகளை நாங்கள் பெற்றுக் கொண்டு சமுர்தி உத்தியோகத்தர், CDO, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், மற்றும் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், பள்ளித் தலைவர்கள், சபைக்குரிய உறுப்பினர்கள் போன்றவர்களின் உதவியோடு நாங்கள் நமது பிரதேசங்களில் வட்டாரங்களில், சந்தேகமான இடங்களில் பிள்ளைகள் கூடுகின்றார்கள் என்ற இடத்தை எடுத்து அங்கத்தவர்கள் குழுக்களின் மூலமாகத்தான் போதைப் பொருளை ஒழிக்கலாமே தவிர STF மூலமோ அதிகார பரவலாக ஒழிக்க முடியாது. என்று எனது கருத்தைத் தெரிவிக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எம். இன்பவதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, போதைப் பொருள் பாவனை எங்களது கிராமத்திற்கு ஒரு சாபக்கேடான நிலையில் இருந்து கொண்டிருக்கின்றது. நாங்கள் தற்போது போதைப் பொருள் விற்பவர்களை யார் என்று பார்கின்ற நேரம் அந்த வீட்டில் ஒரு விதவைப் பெண்ணாக இருக்கின்றார். போதைப் பொருள் என்றவகையில் மதுபானத்தைப் பற்றிக் கதைக்கின்றேன். 02 வீட்டுக்கு இடையில் மதுக் கடைகள் இருக்கின்றது. மதுக்கடைகளை நாங்கள் பொலீசிடம் காட்டிக் கொடுக்கின்ற வேளை எங்களது பெயர்களைக் கூறி மதுக்கடை விற்பனையாளர்களிடம் சட்டத்தில் இருப்பவர்கள் எங்களைக் காட்டிக் கொடுக்கின்றனர். அதனால் எங்களுக்கு பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

எனவே, சட்டத்தில் உள்ளவர்கள் மக்களே மக்களை திருத்த வேண்டும் என்றும், மக்களை நல்ல மனங்களோடு பார்க்க வேண்டும். அதாவது எங்களது கிராம மக்கள் நன்றாக வாழ வேண்டும் என்றால் சட்டத்தை முறையாக கொண்டுவர வேண்டும். மது விற்கும் இடங்களை கூறுகின்ற போது அவர்கள் கூறுகின்ற விடயம் அவர் விதவை அல்லது அங்கவீனமானவர் பாவம்தானே என்று கூறுகின்றார்கள். ஆனால் மக்களை அவர்கள் கவனத்தில் கொள்வதில்லை. சட்டத்தை ஒழுங்காக கொண்டுவந்தால் இதனைத் தவிர்க்கலாம் என்று எனது கருத்தைத் தெரிவிக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, போதைப் பொருள் ஒழிப்பு சம்பந்தமாக சம்மாந்துறையில் பல வருட காலமாக முன்னெடுத்து வருகின்றார்கள். இதற்கு முடிவொன்று இல்லாமல் இருக்கின்றது. நீங்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள் 15 அல்லது 20 வருடங்களுக்கு முன் சம்மாந்துறையில் பள்ளிவாசல்களில் மது போதையில் உள்ளவர்களைக் கொண்டு வந்து அடித்து அவமானப்படித்தி அதனை நிறுத்தினார்கள். ஆனால் தற்போது எந்த பயமும் இல்லாமல் வாகனங்களில் எடுத்துக் கொண்டும், கையில் எடுத்துக்கொண்டும் செல்கின்றார்கள். பொலீஸ் பிடித்தால் சட்டப்படி என்னிடம் இத்தனை போத்தல்கள் இருக்கின்றது என்று கூறுகின்றனர். அதற்கு இன ரீதியான சட்டம் இல்லை. சகோதரி உறுப்பினர் கூறியது போல் ஒரு வீட்டில் ஒன்று அல்லது இரண்டு போத்தல்கள் விற்பார்கள் ஆனால் பொலீஸ் கேட்டால் நான் குடிப்பதற்காக வாங்கியுள்ளேன் என்று கூறுவார்கள்.

இதற்கு எனது கருத்து இளைஞர்கள் அதாவது பிள்ளைகள். பெற்றோர்களைத் திருத்தும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு. அந்த வகைளில் பிள்ளைகள் பொற்றோர்களுக்கு விளிப்புனர்வூட்ட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் அதனை விடுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக

காணப்படும். இதற்கு சகோரதர் சஹீல் அவர்கள் கூறியது போல் விளிப்புனர்வுக் குழுவை உருவாக்கி அதனூடாக நாம் பிரதேச சபை உறுப்பினர்களையும் உள்வாங்கி, மத சார்பானவர்களையும் உள்வாங்கி மக்களை நேரடியாக அனுகி அமைதியான முறையில் சொன்னால் இதனை வெல்ல முடியும். மனரீதியாக உள ரீதியாக திருத்தமுடியுமே தவிர சட்ட ரீதியாக திருத்த முடியாது. இதற்கு புத்தள சம்பவம் உதாரணம். விபச்சார பெண் விடயம் இன்றும் கோட்டில் வழக்கு.

கொட்டில் விடயமாக கௌரவ தவிசாளர் அவர்கள் கூறினார்கள். நீங்கள் நினைத்திருப்பீர்கள் செல்வந்தர்களும் தனவந்தர்களும் தான் கொட்டில் அடிப்பார்கள் என்று. அவர்கள் இதனை பெகேஜ் மூலமதகத்தான் செய்கின்றார்கள். இதன் மொடல் மாறும் ஒருவர் ஒரு வடிவில் கொட்டில் அடித்தால் மற்றவர் அதற்கு மேலதிகமாக செலவு செய்து அதனை விட பெரிதாக அழகான கொட்டில் அடிப்பார்கள். இவ்வாறு நடக்கும் போது நாம் அதனை செய்யும் போது இது பிரதேச சபை கொட்டில் என்று கூறி அதனை உதாசீனம் செய்வார்கள். இது குறிப்பிட்ட காலத்திற்கு பின் பாவனையில் இல்லாமல் போய்விடும் என்பது எனது கருத்து.

வருமானம் தொடர்பாக சம்மாந்துறையில் கேட்றின் போட்டது வெளியூர் நபர் ஏன்? அதனை சம்மாந்துறை மக்கள் மூலம் செய்ய முடியாது. இது எனது கருத்து. சபைக்குரிய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு நிர்தவூரில் கொள்வனவு செய்கின்றார்கள். ஏன் அதனை குறைந்த விலையில் எமது ஊரில் உள்ள கடைகளில் வாங்க முடியாது. நமது ஊரில் வரி செலுத்துகின்ற கடைகள் அதிகமாக இருக்கின்றது அவர்களிடம் ஏன் வாங்குவதில்லை. கொள்வனவு செய்வதில் அதிக குளர்பாடு உள்ளது. ஒரு பென் வாங்கினாலும் சம்மாந்துறையில் வாங்கினால் எமது ஊர் பணம் எமது ஊரில்தான் நிற்கும். இது எனது கருத்தாகும் என நான் குறிப்பிடுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, போதைப் பொருள் ஒழிப்பு விடயத்திற்கு பாரம்பரிய வைத்தியர்களையும் நாங்கள் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அனுமதிக்கப்படாத போதைவஸ்து லேவியங்களும் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதனால் அவர்களையும் இதற்குள் உள்வாங்கப்ப வேண்டும் என்று நான் உங்களிடம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களின் கருத்துக்களை உள்வாங்கியவனாக உண்மையாக உங்களது கருத்துக்ளைக் கேட்கும் போது. நாம் சமூக ரீதியில் எவ்வளவு கோளைத்தனமாக நடக்கின்றோம் என்பதுதான். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு GS, சமுர்த்தி அதிகாரி, EDO, பள்ளித் தலைவர்கள், அதிபர்கள், PHI போன்ற அனைவரும் இருந்தும் எல்வோருக்கும் எல்லாம் தெரியும். ஆனால் முன்னின்று எவரும் செயற்படுவதில்லை. இதனால் சமூகம் சீரிகெடுவது நமக்குத் தொரியும். உதாரணமாக, கௌரவ உறுப்பினர் முஸம்மில் கூறியது போல் பிள்ளைகளின் மூலம் பெற்றோர்களைத் திருத்த வேண்டும். பிள்ளைகள் மட்டுமல்ல நமது ஊர்மக்கள் அனைவரும் பார்த்துக் கொடிண்டிருக்கின்றார்கள். இதனை நமது பிள்ளைகளுக்காக செய்ய வேண்டும். இன்று சமூக அழுத்தத்தினால் இவைகள் நடக்கின்றது. நமக்குத் தெரியும் இதற்கான காரணம் என்னவென்று, ஒன்று பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லாதிருப்பது. பல குடும்பங்களில் தாய் அல்லது தந்தை வெளிநாடுகளில் இருப்பது, பிள்ளைகளுடன் கதைப்பதற்கு கூட நேரமில்லை இவைகளை மாற்றுவதற்கான முயற்சியில் நமது சபை ஈடுபட வேண்டும். பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாப்பது நமது கடமை.

உப தவிசாளர் அவர்கள் பொது இடத்தில் சிகரட் குடிப்பது பற்றிச் கூறியது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. பொது இடத்தில் சிகரட் குடிப்பதை தடை செய்வது நமது சட்டபூர்வமான கடமை. அதில் எனக்கு பிரச்சினை வந்தால் அதனைப்பற்றி அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். அதனைச் செய்வதற்கு இந்த சபை உறுப்பினர்கள் ஆதரவு வழங்க வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோள்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதற்கு தெண்டமும் உண்டு. இதற்கு உபதேசம் செய்பவர்கள் அதனை முதல் கட்டுப்படுத்த வேண்டும். அப்போதுதான் அதனை இலகுவாக செய்ய முடியும் விளினையடி கிராம சேவையில் உள்ள கிராம சேவகர் கனக்கெடுப்பில் 13 பேர்தான் என்ற கனக்கெடுப்பில் சம்மாந்துறையில் 4367 பேர் பாவனையயில் இருப்பார்கள். ஒரு சிகரட் 50 அல்லது 100 ரூபா என்றால் 5000 பேர் என்றால் ஒரு நாளைக்கு 5 இலட்சம் பணம் வீனாகின்றது. ஒரு மாதத்திற்கு ஒன்னரைக் கோடி வீனாகின்றது. இதனைக் கூறுவதனால் வேறு விமர்சனங்களும் வரலாம்.

கனக்கெடுப்பின் படி 451 பேர் 19 வயதிற்குட்பட்டவர். 1396 பேர் மதுபாவனையில் ஈடுபடுபவர். அதில் 43 பேர் 19 வயதிற்கு கீழ்பட்டவர். 86 பேர் ஏனைய போதைப் பாவனையில் உள்ளவர். உண்மையாக ஒரு அமைப்பில் கூறினால் நமது பிரதேசத்தில் இருக்கின்ற சனத்தொகையில் இது மிகவும் குறைவான அளவுதான். ஒரு சமூகத்தில் ஒருவர் நிலைகெட்டால் அந்த சமூகம் முழுவதும் பாதிப்படைகின்றது. அதற்காக நாங்களும் முடிந்தளவு இதற்கு முன்னுதாரணமாக செயற்பட வேண்டும். சிகரட் தொடர்பான விளம்பரம் கூட மக்களுக்கு தெளிவு படுத்தும் வகையில் இதில் போடப்பட்டுள்ளது.

சென்னல் கிராமம் 02 இல் தனியாக விளிப்புனர்வு செய்ய முடியாது. கைகாடி பிரதேசம் போன்ற இடங்களில் அதிகமாக நடக்கின்றது. இதனை பள்ளிவாசலில் உள்ளவர்களுடன் இணைந்து கட்டுப்படுத்த முடியும். சென்னல் கிராமம் - 01 இல் சனத்தொகை குறைவு. மாலை நேரத்தில் சென்றால் குறிப்பிட்ட சில வீடுகளில் வெளிப்படையாகவே நடந்துகொண்டிருக்கின்றது. இதற்கு அதிகமான பாதுகாப்புத் தேவை. எந்த எழிச்சியும் மக்களுடாக வரும்போது அது வெற்றியடையும். சில நாடுகளில் போதைப் பொருள் வருமானமாகவே இருக்கின்றது. இவற்றின் தலா வருமானமே போதைப் பொருள்தான்.

காரைதீவு கண்ணகியம்மன் கோவில் 200 M தொலைவில் உள்ள மதுபான கடைக்கு அரசாங்கம் லைசன் வழங்கியுள்ளது. இதனை எவ்வாறு கட்டுப்படுத்துவது. சென்றல் கேம்பில் வைத்தியசாலை, பாடசாலை, பள்ளி கோவில் இவைகளுக்குப் பக்கத்தில் அதாவது 500 M க்குள் மத்தியில் சாராயக்டை அரசாங்கத்தில் லைசன் பெற்று உள்ளது. இவ்வாறு இருந்தால் கட்டுப்படுத்துவது இலகுவான விடயமல்ல. அரசாங்கமே இதற்கு அனுமதி வழங்குகின்றது. எனவே இதனைக் கட்டுப்படுத்துவது கடினமான பணியாகும். இதற்கு உள ரீரியாகவும் உளார்ந்த ரீதியாகவும் செயற்பட வேண்டும். அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் இதற்கு வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே,போதைப் பொருள் சம்பந்தமாக எனது வட்டாரத்தை அடிப்படையாக வைத்து பேசும் போது போதைப் பொருள் அருந்துபவர்களைக் கட்டுப்படுத்துவதை விட அவற்றை விற்பவர்களை கட்டுப்படுத்துவது இலகுவான விடயம். ஏனெனில் எங்களது வளத்தாப்பிட்டி வட்டாரத்தில் 08 பேர் போட்டி போட்டுக் கொண்டு கேரள கஞ்சா விற்பனை செய்கின்றார்கள். அவர்களை நாம் நேரடியாக அழைத்து நம்பிக்கையாளர் சபை , ஆலையத் தலைவர்கள் ஊடாக அறிவுரைகளையும் நமது கருத்துக்களையும் கூறி. அவர்களை தொடர்ந்து கண்கானித்து வந்தோமானால் இதனைக் கட்டுப்படுத்த முடியும். கஞ்சா அருகில் இல்லை என்றால் அருந்துபவர்களின் எண்ணிக்கை குறையும்.

கேரளக் கஞ்சா இந்தியாவில் இருந்து வருவதென்றால் இது சின்ன மட்டத்தில் அல்லாமல் பரந்தளவில் செய்கின்ற விடயமாகும். இதனைக் கட்டுப்படுத்த முயற்சித்த போது இது பெரிய மட்டத்தில் இருந்து நடக்கின்றது இதில் தலையிட வேண்டாம் என்ற அழுத்தம் எனக்கு வந்தது. எனவே இதற்கு மத ஸ்தாபனங்கள் பங்களிப்புச் செய்தால் இதனை நிறுத்த முடியும். விற்பவர்களின் பிரச்சினையை அறிந்து அவர்களுக்கு வாழ்வாதாரத்தை அமைத்துக் கொடுத்தால் நிச்சயமாக

இதனைக் கட்டுப்படுத்தலாம். லைசன் கொடுத்து விற்பனை செய்வதை நிறுத்த முடியாது. காரைதீவு மக்கள் எவ்வளவு போராடியும் நிறுத்த முடியவில்லை. இதனை நாம் சட்ட ரீதியற்ற முறையில் ஊர் மக்கள் என்ற வகையில் எமக்கான கடமையையும் பொறுப்பையும் செய்யலாம். STF எடுக்கனும் என்பதற்கு காரணம் எனக்கு வந்த அழுத்தம். அதாவது, இது சின்ன மட்டத்தில் அல்ல பெரிய மட்டத்தில் நடக்கின்றது. இதற்குள் நீங்கள் தலையிட வேண்டாம் என்ற அழுத்தத்தினால்தான்.

**கௌரவ உறுப்பினர் என். கோவிந்த சாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உள்ளூரிலும் விளிப்புனர்வு இருக்கின்ற நேரத்தில் வெளியூரில் இதன் தாக்கம் உண்டு. உதாரணமாக 1997 ஆம் ஆண்டு சிஹான் பெரேரா அவர்கள் சம்மாந்துறையில் OIC இருந்த காலத்தில் புதிய வளத்தாப்பிட்டியில் கூடுதலாக மதுபானம் விற்பனை செய்யப்பட்டது. அப்போது நான் அங்கு கிராம உத்தியோகத்தராக இருந்தேன். இளைஞர்கள் என்னிடம் கூறினார்கள் மது கூடுதலாக விற்கப்படுகின்றது. அதனை நிறுத்த வேண்டும். என்று கூறினார்கள். OIC யிடம் கூறியவுடன் அவர் கூறினார் உங்களால் என்ன செய்ய முடியுமோ அதனைச் செய்யுங்கள் என்றார். 50 இளைஞர்கள் முன்வந்து மது விற்பவர்களை நிறுத்துவதற்காக போத்தல்களை உடைத்து பிரச்சினையிட்டு போராடி அதனை நிறுத்தினோம்.

பின்னர் பழய வளத்தாப்பிட்டியில் சென்றவுடன் அவர்கள் கூறினார்கள் உங்களது ஊரை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள் எங்களது ஊரை நாங்கள் பார்த்துக் கொள்ளுவோம். என்று கூறியதும் அந்த முயற்சி அப்படியே கைவிடப்பட்டது. இருந்தாலும் புதிய வளத்தாப்பிட்டியில் மது விற்பனை இல்லை.

அண்மையில் ஒரு ஹாஜியாரை சந்தித்த போது, அவர் என்னிடம் அறிக்கை எடுப்பதற்காக காத்தான்குடியில் இருந்து வந்தார். அவரிடம் நான் கேட்டேன், உங்களது ஊர் நிலவரங்கள், அரசியல் நிலவரங்கள் எவ்வாறு இருக்கின்றது. அதற்கு அவர் கூறினார் எங்களது ஊரில் புதிதாக இளைஞ்சர் படை ஒன்று உருவாகியிருக்கின்றது. படித்தவர்களும் சேர்ந்துள்ளார்கள். அவர்கள் மது அருந்திக் கொன்டு செல்பவர்கள் வீடு போய் சேரமாட்டார்கள். வீதியில்தான் கிடப்பார்கள். இது பற்றி யாராவது கேட்டால் அவர்களுக்கும் அடிவிழும் அப்படியான நிலையில் எமது ஊர் கானப்படுகின்றது. இலங்கையில் மதுபானம் பாவிப்பதிலும் விற்பதிலும் வெற்றியமைந்த ஊர் காத்தான்குடியாகும். என்ற செய்தியை அவர் கூறினார். இப்படியாக எமது பிரதேசத்திலும் போதையைக் கட்டுப்படுத்துவதற்காக ஓர் இளைஞர் குழுவை உருவாககி இதனை செயற்படுத்தலாம்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஒரு திருத்தம். போதைப் பொருள் மாத்திரை வியாபாரம் பரவலாக நடைபெறுகின்றது. ஏதோ ஒரு மாத்திரையை பிள்ளைகள் பாவித்து ஒரு வெறித்தன்மையுடன் இருப்பதனை நாம் அடையாளம் கானலாம். வேறு ஏதாவது என்றால் ஒரு மனம் வாடை போன்ற வித்தியாசம் தெரியும் ஆனால் மாத்திரையில் எதுவம் தெரியாது அவர் நன்பர் கூறினால்தான் தெரிய வரும்.

எங்களது கௌரவ உறுப்பினர் கோவிந்த சாமி அவர்கள் கூறினார்கள் வடிசாராயத்தை நாங்கள் 13 பேரைக் கட்டுப்படுத்தினோம். அந்த நேரம் இருந்த OIC சிஹான் பெரேரா அவர்கள் அதற்கான ஒத்துழைப்பை வழங்கினார். ஆலையங்கள், பள்ளி நிர்வாகங்கள் ஒத்துழைப்பு வழங்கினால் இவற்றைக் கட்டுப்படுத்தலாம். என்ற நம்பிக்கை இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த சபையில் கூறப்பட்ட கருத்துக்களை உள்வாங்கிய போது உங்களுக்கு எல்லாம் தெரிகின்றது நமக்கு எல்லாம் தெரிந்தும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இன்று மதஸ்தாபனம், நம்பிக்கையாளர் சபை, கோயில் தலைவர்கள் அனைவரும் சேந்து. சபையுடன் ஒரு பங்காளியாக

மாறி ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் உள்ள உத்தியோகத்தர்களையும் உள்வாங்கி கௌரவ உறுப்பினர்களும் சேர்ந்து நமது சமூகத்துக்காக ஒரு யுத்தமாக செயற்பட வேண்டும்.

நமது ஊரில் அல் அர்சத் வித்தியாலையத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான ஒரு வகுப்பு நடக்கின்றது. அதனை பராமரிப்பது நமது கடமை. சட்டத்திலும் அதற்கு இடமுண்டு. அதற்குரிய எல்லை வட்டாரரங்களான விளினையடி, மலையடிக் கிராம கௌரவ உறுப்பினர்கள் கல்வி அலுவலகத்தின் சார்பாக, கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட் அவர்கள். கௌரவ உறுப்பினர் கோவிந்த சாமி அவர்கள், கௌரவ உறுப்பினர்கள் சரீபா, சிஹாமா அவர்களும் இணைந்த ஒரு குழு பாடசாலைக்கு விஜயம் செய்து அதனை அவதானித்து நாம் எந்த வழியில் அந்தக் குழந்தைகளுக்கு உதவலாம் என்ற அறிக்கையை இந்த சபைக்கு சமர்ப்பிக்குமாறு வேண்டியவனாக,

உங்களுக்குத் தெரியும் 03 வது அமர்வில் கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் ஜப்பானில் உள்ள ஒரு கிராமத்தோடு ஒரு தொடர்பை ஏற்படுத்துவதற்கு முன்மொழிவை செய்தார் அதே வழியான இன்னுமொரு தொடர்பு எனக்கு நேரடியாக ஒரு வேண்டுகோள் வந்திருக்கின்றது. சைனாவில் இருந்து யூனான் Provision with Friendship for Foring ... அவர்கள் ஒரு வேண்டு கோள். இதனை கௌரவ அமைச்சர் றிசாட் பதியுதீன் அவர்களின் தூண்டுதலாகத்தான் இருக்க வேண்டும். அவர் எனக்கு Email அனுப்பி இருக்கின்றார்கள். நான் அதற்குரிய விபரங்களை அனுப்புங்கள் என்று கேட்டிருக்கின்றேன். சைனா உலகத்தில் பலம்வாய்ந்த நாடு அந்தத் தொடர்பை ஏற்படுத்துவதற்கு சபையின் அனுமதியை வேண்டியவகான, தேனீர் அருந்துவதற்காக இந்த சபையை 15 நிமிடத்திற்கு ஒத்தி வைக்கின்றேன்.

## கௌரவ உறுப்பினர்களின் மனுக்கள் / பிரேரணைகள்

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எனது முன்மொழிவில் முதலாவது **வளத்தாப்பிட்டி கிராமத்தில் உள்ள பாலர் பாடசாலைகளை சபையின் கீழ் இணைத்தல்.** விசேடமாக எங்களது உள்ளூராட்சி மன்றத்தினூடாக பாலர் பாடசாலைகள் நடாத்தபட்டுக் கொண்டிருந்தது. அதன் அடிப்படையில் வழத்தாப்பிட்டி சம்மாந்துறையின் ஒரு எல்லைக் கிராமமாக இருக்கின்றது. அத்துடன் பின்தங்கிய கிராமமாக இருக்கின்றது. இஸ்மாயில் புரத்திலும் பாலர் பாடசாலை இருக்கின்றது. அந்தப் பாடசாலைக்கு எதுவிதமான நிதி உதவியோ, ஆதரவும்மின்றி ஒரு ஆசிரியரின் தனி முயற்சியினால் ஒரு சில அண்ணையரின் ஒத்துழைப்புடனே பாடசாலை நடந்து கொண்டிருக்கின்றது. தற்பொழுது கூட அந்தப் பாடசாலையில் ஒரு வேலை இருப்பதாக அந்த ஆசிரியர் என்னிடம் தொடர்பு கொண்டு அதனை செய்து தருமாறு கூறினார். எல்லா நேரங்களிலும் எங்களால் உதவி செய்ய முடியாத ஒரு சூழல்.

இதனைப் போன்று பழைய வளத்தாப்பிட்டி கிராமத்தில் ஒரு பாடசாலை ‘‘சுவட்’’ நிறுவத்தினால் அதனை பராமரிப்பதாக கூறிக்கொண்டு அடிப்படை வசதிகள் முறையற்றதாகவும், பிள்ளைகள் செல்வதற்கு முறையான வீதிகள் கூட இல்லாமல் அந்தப் பாடசாலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதே போன்று புதிய வளத்தாப்பிட்டி கிராமத்தில் ஒரு பாடசாலை இயங்கிக் கொண்டிருக்கின்றது. இந்தப் பாடசாலைகளை சாதாரணமாக வழி நடாத்துவதற்கு அங்குள்ள சமூகங்களிடம் போதிய வருமானம் இல்லாத போதிலும் அதற்குத் தேவையான வளங்களைப் பெற்றுக் கொடுப்பதில் சிரமமாக உள்ளது. தற்போது கிழக்கு மாகாண சபையிலே பாலர் பாடசாலை பணியகம் ஒன்று அமைத்து அதனூடாக செற்பாடுகள் இடம்பெற்றாலும், ஆசிரியர்களுக்கு 3000 ரூபா கொடுப்பனவு மாத்திரம் வழங்கப்பட்டது. அடுத்த கட்டமாக எந்த வேலைத் திட்டமும் நடைபெறுவதாக நான் அறியவில்லை.

வலயக் கல்வித் திணைக்களங்களினூடாக அவர்களுக்கான பயிற்சிகள், மாதாந்த செயலமர்வுகள் வழிகாட்டல்கள் இடம்பெறுகின்றன. எனவே எமது சம்மாந்துறை பிரதேச சபையின் கீழ் இருக்கின்ற

பாடசாலைகளை பராமரிக்க வேண்டும். எமது பொறுப்பில் அதனைக் கண்காணிப்பது சிறந்ததாக இருக்கும். அதன் அடிப்படையில் வளத்தாப்பிட்டி வட்டாரத்தில் 03 பாடசாலைகள் இருக்கின்றது. அவற்றை குறைந்தது மாதாந்தம் சிறு தொகையாவது வழங்கி அல்லது அதற்குத் தேவையான வழிவகைகளை செய்து கொடுப்பதனூடாக நேரடியாக வட்டாரத்திற்குள் வேலையைச் செய்கின்றேன் என்று வலுவாக கூறமுடியும். சாதாரணமாக லைட் போடுவது, கழிவுகளை அகற்றுவதுதான் எங்களது பிரதேச சபையின் கடமை என்பதற்கு மேலதிகமாக சென்று இவ்வாறான சேவைகளையும் செய்வது எமது சமூகத்தின் கட்டாயக் கடமையாகும். அதன் அடிப்படையில் இம் 03 பாடசாலைகளையும் உள்வாங்குவது கட்டாயமாகும்.

சம்மாந்துறையில் பொருளாதாரத்தில் பின்தங்கியிருக்கும் பாடசாலைகளை உள்வாங்கி சபையின் வழிகாட்டல் மூலமாக சபையில் செயற்படுத்துவது சிறந்ததாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன். கூட்டக்குறிப்புக்குள் மாத்திரம் இதனை உட்படுத்தாது, இதற்கான சுற்றறிக்கையை சபை மட்டத்தில் தெரிவு செய்து பாலர் பாடசாலைகளை ஒன்றினைத்து அதற்கான வழிகாட்டல்களை செய்ய வேண்டும். என்பது எனது முதலாவது முன்மொழிவாகும்.

**02 வது முன்மொழிவு மல்வத்தை உப அலுவலகத்தை புனரமைத்தல்** சென்ற கூட்டத்திலும் பேசியிருக்கின்றோம். எமது மல்வத்தை பிரதேச சபை உப அலுவலகத்தில் 03 அல்லது நான்கு கட்டடங்கள் இருக்கின்றது. அதில் 03 கட்டடங்களின் கூரைகள் பகுதி பகுதியாக உடைந்திருக்கின்றது. உடைந்த பகுதிகளைத் திருத்துவதற்கு குறைந்தது இரண்டரை இலட்சம் ரூபா நிதி இருந்தால் அதனைத் திருத்தலாம். இப்போது திருத்தாவிட்டால் அந்தக் கூரைகள் முற்றுமுழுதாக உடைந்து விட்டால், எமது சபைக்கு பாரிய இளப்பாகும். ஏனென்றால் ஒரு கட்டடத்தை பொதுவாக கட்டுவதானால் நமக்கு பாரிய நிதி தேவைப்படும். எனவே இருக்கும் கட்டடத்தைப் பராமரிப்பதில் சபை அக்கரை செலுத்தி அதற்கான மதிப்பீட்டு அறிக்கையை தயார் செய்து அதற்கான நிதி ஒதுக்கீட்டை வழங்கி பராமரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எதிர்வரும் காலத்தில் அந்தக் கட்டடத்தில் சபை வருமானம் வரக்கூடிய பொறுப்பினை உப தவிசாளர் என்ற முறையில் கூறுகின்றேன். என்று கூறி எனது உரையை முடிக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எம். இன்பவதி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறியது போன்று எனது பிரதேசத்திலும் பாலர் பாடசாலை இயங்குகின்றது. 05 வருடங்களாக பெற்றோரின் அனுசரனையினால் தான் இயங்குகின்றது. பாடசாலைக்கான நிதி உதவிகளை யாரும் வழங்குவதில்லை. அதனையும் அதற்குள் சேர்த்துக் கொள்ளுமாறு தங்களிடம் தயவாய்க் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

பாலர்பாடசாலைகளைப் பொறுத்தமட்டில் உங்களுக்குத் தெரியும் சென்ற சபையில் ஆரம்பத்தில் 02 பாடசாலைகளுடன் சேர்த்து இன்னும் 02 பாடசாலைகள் உள்வாங்கப்பட்டது. ஆனால் அந்தக் கால கட்டத்தில் மாகாண சபை பொறுப்பை ஏற்று பிரதேச சபைக்கு ஆளணி எடுப்பதற்கு தடை விதித்தது. நாங்கள் எடுத்ததனால் 02 பாடசாலை ஆசிரியர்களுக்கும் இன்று ஊழியருக்குரிய ஆளணியில் உள்வாங்கப்பட்டுள்ளனர். நாம் இந்த வேண்டுகோளை மாகாண சபைக்கு எழுதி இந்தப் பிரேரனையை முன்வைத்து அவர்களிடம் இருந்து வரும் பதிலுக்கு அமைய நாம் மற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அந்த காலகட்டத்தில் புதிய வளத்தாப்பிட்டி, பழைய வளத்தாப்பிட்டி 02 பாடசாலைகளையும் உள்வாங்குவதற்கு முயற்சி எடுத்தேன். ஆனால் அதனை NGO நிறுவனம் ஒன்று நடாத்தியதனால் அதனை உள்வாங்க முடியவில்லை. நமது சபை அதனைச் செய்வதென்றால் பாரிய செலவு உள்ளது. அதனைச் செய்யலாம். ஆனால் அதற்கான வளம், காடர் போன்ற பிரச்சினைகள். நிச்சயமாக அடுத்த அமர்வுக்கு முன் இதற்கான தீர்வினை கானுவோம்.

கட்டடத் திருத்ததினை உடனடியாக பிரதேச சபை தீர்மானமாக எடுத்து அதனை செயற்படுத்த வேண்டும். என்று சபையின் செயலாளருக்கு வேண்டுகோள் விடுத்தவனாக, மல்வத்தைச் சந்தியில் உள்ள மார்கட்டினை அமைச்சினால் அனுப்பப்பட்ட குறைந்த வருமானம் கொண்ட பின்தங்கிய உள்ளூராட்சி சபைகள் என்ற திட்டத்தில் மல்வத்தை சந்தையை புனரமைத்து வருமானம் வரக்கூடிய வாராந்த சந்தை செய்யக்கூடிய மையமாக மாற்றுவதற்கும் நாம் தீர்மானம் எடுப்போம்.

**தீர்மானம் 12**

மல்வத்தை உப அலுவலக கட்டடங்களின் கூரைகளை புனரமைப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம். இன்பவதி |

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் பாலர் பாடசாலை ஆசிரியர் நியமனம் பற்றிக் குறிப்பிடவில்லை. அவர்களுக்கு நியமனம் வழங்குவது சாத்தியமற்றது எனறு நான் நினைக்கின்றேன். எனது கருத்து என்னவெனில் அவைகளை நாம் பராமரிக்க வேண்டும் என்றும். அவை சார்ந்த விடயங்களில் அக்கரை செலுத்த வேண்டும். என்பது எனது வேண்டுகோள்.

மல்வத்தைச் சந்தியில் கடந்த காாலங்களிலே 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வாராந்த சந்தை இயங்கியிருக்கின்றது. பொது மலசல கூடம், பொது கட்டடங்கள் இருந்திருக்கின்றது. அவை தற்போது இல்லை.

இந்தப் பின்னனியில் நான் தேசிய நல்லினக்க குறைபாட்டு அமைச்சினூடாக 02 Million நிதியைப் பெற்று வாராந்த சந்தைக்கட்டடம் ஒன்றை எமது சபையினூடாக செய்வதற்கு தீர்மானித்திருக்கின்றோம். வாராந்த சந்தையை எதிர்வரும் 18 ஆம் திகதி கௌரவ ஆளுனரின் தலைமையிலும், பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்களின் தலைமையிலும் திறப்பதற்கு ஏற்பாடு செய்கின்றோம். தற்போது ஆளுனரின் திகதியில் மாற்றம் ஏற்பட்டுள்ளதனால் எதிர்வரும் 25 ஆம் திகதி எமது மல்வத்தைச் சந்தியின் வாராந்த சந்தை சம்மாந்துறை பிரதேச சபையின் அனுசரனையினூடாக திறந்து வைக்கப்படும். ஒவ்வொரு புதன் கிழமையும் அங்கே எமது மக்களுக்குரிய பொருட்கள் கொள்வனவு செய்யக்கூடிய நிலை ஏற்படும். எனவே இதற்கு எமது சபையின் அனைத்து உறுப்பினர்களும் பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என விணயமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

நேற்று நாங்கள் பேசிய விடயம் மல்வத்தை சந்தி என்பது மஜீட்புரம், 26 கொளனி மக்கள் இரவு வேளைகளில் கொழும்புக்குச் செல்கின்ற போது அதே போல் வந்து இறங்கி மாறிச் செல்வது அவ்விடத்தில் படை முகாமும் இருக்கின்றது. எனவே அவ்விடத்தில் பொது மலசலகூடம் இருந்தால் பிரயானிகளுக்கும் அவ்விடத்தில் வசிக்கும் மக்களுக்கும் சாதகமாக இருக்கும். எனவே, அச் சந்தியில் பொது மலசலகூடம் அமைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குமாறு இந்த சபையிடம் கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மலசலகூடம் என்று கூறாமல் பொதுவான இடங்களில் அதாவது மக்கள் கூடும் இடங்களில் ஒரு Rest Room அமைப்பதற்கான வேலைத்திட்டத்திற்குள் உள்வாங்கி அமைப்பதற்கு நாம் முடிவெடுப்போம்.

பாலர் பாடசாலைகள் பராமரிப்தென்பது சபையின் கீழ் இருக்கும் பாடசாலைகளுக்கு Electricity,Water Bill கட்டுகின்றோம். அத்தோடு ஆசிரியர்களுக்கான கொடுப்பனவும்

வழங்கப்படுகின்றது. கொடுப்பனவு வழங்க முடியாவிட்டாலும் மற்ற பராமரிப்புக்களை நாம் சபையில் தீர்மானம் எடுத்தால் மாகாண சபையின் அனுமதியுடன் செயற்படலாம். நமது ஊரில் 100 க்கும் மேற்பட்ட பாடசாலைகள் இருக்கின்றது. அவற்றில் ஏதாவது அடிப்படையில் கிராமத்திற்கு ஒரு பாடசாலை என்று எடுத்தால்தான் சரியாக செய்யலாம். நிச்சயமாக வளத்தாப்பிட்டிக்கு ஒன்று, மல்வத்தைக்கு ஒன்று, மஜீட்புரத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் செய்து வரலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம் றியாஸ் அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். கௌரவ தவிசாளர் அவர்களே, என்னால் முன்வைக்கப்பட்ட பிரேரனை **இலத்திரனியல் விளம்பரப் பலகை பொருத்துதல்**. அதாவது நகர அபிவிருத்திச் சுட்டியாகவும். நகரத்தை அழகு படுத்தல், நகர சூழல் பாதுகாப்பு போன்ற விடயங்களையும், சுவரொட்டி கலாசாரங்களின் தூர விலகி அழகு படுத்தல். இதன் மூலம் மேற்கூறிய விடயங்களை இல்லாது அல்லது குறைக்கக்கூடியதாக இருக்கும். எமது சபைக்கு வருமானம் ஈட்டக்கூடிய வழியாகவும் அமையும் என்று நான் நினைக்கின்றேன். இதனை நடைமுறைப்படுத்துவதற்கு எமது சபையில் பண வைப்புக்கள் இல்லை என்றாலும் வங்கிக்கடன் மூலமாகவும் இதனை நடைமுறைப்படுத்த முடியும் என்றும் நான் தகவல் அறிந்தேன். எனவே எமது சபையில் வருமானம் ஈட்டும் வழியாக இலத்திரனியல் விளம்பரப் பலகையை அமைப்பதற்கு சபையின் மேலான ஆணையை வேண்டி நிற்கின்றேன்.

சபையில் வருமானம் ஈட்டல் சம்பந்தமாக பேசுகின்ற போது கடந்த 03 வது சபையில் முன்வைக்கப்பட்ட அபகஸ் என்பதன் மூலமாகவும் சபையிற்கு ஒரு கனிசமான வருமானத்தை ஈட்ட முடியும் என்பதுடன் எமது இளம் சந்ததியினரை கணிதவியல் விற்பகர்களாகவும் ஆக்க முடியும். எனவே, நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அல்லது எமது சபைக்கு வருமானம் ஈட்டக்கூடிய வழியில் எனது 02 பிரேரனையையும் முன்வைத்ததனால் சபைக்கு போதிய வருமானத்தை ஈட்ட முடியும்.

எமது இலத்திரனியல் விளம்பரப் பலகை என்பது நான் அறிந்த வரையில் சாதாரணமாக மாதம் ஒன்றுக்கு 05 அல்லது 06 இலட்சம் ரூபாக்களை பெற முடியும். இங்குள்ள கடைகளை விளம்பரப்படுத்துவது Company மூலமாக விளம்பரப்படுத்தல்கள். எமது அரசியல் கட்சிகளுடனான விளம்பரங்களைக்கூட வருமானத்தை ஈட்டக்கூடியதாக அமையும். எனவே எமது சபை இதற்கான அனுமதியை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த விடயத்தில் மாகாண சபைகள், நகர திட்டமிடல் அமைச்சுக்கும் Proposal ஐக் கொடுத்துள்ளோம். அது சரிவராத பட்சத்தில் Local Government Lone திட்டத்தில் இதனை நடைமுறைப்படுத்துவதற்கு சபைத் தீர்மானமாக நாம் உள்வாங்குவோம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, விளினயடி சந்தி சுற்றுவட்டம், அல்-மர்ஜான் மகளிர் கல்லூரிக்கு முன்பாக மேம் பாலம் நகரின் ஊடாகச் செல்லும் நெடுஞ்சாலைக்கு LED உயர்ந்த தெருலாம்பு அமைத்தல். என்கின்ற பிரேரனையை சபைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

விளினயாடி சந்தியில் பிரதான நெடுஞ்சாலையும் அமீர் அலி மாவத்தையும் பௌஸ் மாவத்தையும் சேர்ந்து நான்கு பாதைகள் சந்திக்கின்ற பிரதான சந்தியாக விளினயாடி சந்தி அமைந்துள்ளது. இந் நான்கு பாதைகள் ஊடாகவும் ஏராளமான வாகனப் போக்கு வரத்தும், பொது மக்கள்

நடமாட்டமும் உள்ளது. இதனால் அடிக்கடி வீதி விபத்துகள் ஏற்பட்டு பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

ஆகவே, இவ்விடத்தின் இடவசதிக்கு ஏற்றவாறு சிறிய சுற்றுவட்டம் அமைப்பதன் மூலம் விபத்துகள் அனைத்தையும் தடுக்கமுடியும். அத்துடன் சம்மாந்துறை நகர் மேலும் விரிவடைந்து எளில் தரும். அடுத்ததாக அல்-மர்ஜான் மகளிர் கல்லுரிக்கு முன்பதாக நெடுஞ்சாலை செல்வதாலும், இது பிரதான பாதையாக இருப்பதாலும் இக்கல்லுரியின் பிரதான நுளைவாயில் இப்பாதையை அண்மித்ததாக உள்ளதாலும், மற்றும் இக்கல்லுரிக்கு மாணவர்கள் காலையிலும், பாடசாலை முடியும் வேளையிலும், இக்கல்லூரியில் நடைபெறும் விசேட விழாக்கள், வைபவங்களின் போதும் மக்கள் கூட்டங்களும் மாணவர்களும் இக்கல்லுரிக்கு சென்றுவருகின்றனர். இவ் வேளைகளில் மேலதிக மோட்டார் போக்குவரத்து பொலிசார் கடமையில் ஈடுபடுத்தபடுகின்றனர். அவ்வேளையிலும் எத்தனையோ போக்குவரத்து கட்டளை மீறல்களும், விபத்துக்களும் இடம்பெற்றுவருகின்றது. இதனால் இவ்வூர் பொதுமக்கள் பெரும் சிரமம் அடைகின்றனர்.

இந்நிலையை கவனத்திற் கொண்டு அல்-மர்ஜான் கல்லுரிக்கு முன்பாக குறிப்பாக மாணவர்கள் நெடுஞ்சாலையை கடந்து சென்றுவர ஓர் மேம்பாலம் அமைப்பது அவசியமாகும். இதனை இச் சபை ஏகமனதாக ஏற்றுக் கொள்வீர்கள் என எதிர்பார்க்கிறேன். அத்துடன் கௌரவ தவிசாளர் அவர்கள் பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்வீர்கள் எனவும் எதிர்பார்க்கின்றேன். மேலும் எமது சம்மாந்துறையின் மத்தியான ஹிஜ்ரா சந்தி சுற்றுவட்டத்திலிருந்து நாற்புறமும் பிரதான பாதைகள் செல்கின்றது. இப் பாதைகள் பக்கமாக பலமாடிக் கட்டங்களும், பெரும் மரங்களும் அமைந்து காணப்படுவதால் பொருத்தப்பட்டுள்ள தெருலாம்புகளின் ஒளிகளை கட்டங்களும், மரங்களும் மறைத்து விடுவதால் பிரதான பாதை இடை இடையே இருள் சூழ்ந்து காடசியளிக்கிறது. இது எமது நகருக்கு சிறப்பாக அமையவில்லை. அத்துடன் பொருத்தப்பட்டுள்ள தெருலாம்புகள் ஒரே நிறத்தில் ஒரே சீராக பொருத்தப்படாததால் இரவு வேளையில் பார்ப்பதற்கு நகரின் அழகு காட்சியளிக் வில்லை. அதேவேளை காரைதீவின் சுற்று வட்டதிலிருந்து மாவடிப்பள்ளி கிராமத்தை நோக்கிய பிரதான பாதையில் பொருத்தப்பட்டுள்ள உயர்ந்த கம்பம் கொண்ட LED தெருலாம்பின் இரவு நேரகாட்சி மனதை கொள்ளை கொள்கிறது.

எனவே, சம்மாந்துறை நகரை எளில்படுத்துவதும், அபிவிருத்தியையும் நோக்கமாகக் கொண்டு சம்மாந்துறை ஹிஜ்ரா சந்தி மணிக்கூட்டு கோபுர சுற்று வட்டத்திலிருந்து நாற்புறமும் குறிக்கப்பட்ட சதுரங்களுக்கு உயர்ந்த கம்பங்களைக் கொண்ட LED வீதி இலாம்புகள் அமைத்து எமது நகரை மேலும் இரவு நேரங்களிலும் அழகு படுத்துவது இம் மேலான சபையின் கடமைப்பாடாகும். ஆகவே, சகலரும் ஏகமனதாக மேற் கூறப்பட்ட சுற்றுவட்டம், மேம்பாலம், LED தெரு இலாம்பு பொருத்துதல் ஆகிய மூன்றையும் கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வீர்கள் என எதிர் பார்ப்பதோடு, மேற்படி விடயத்தை நடைமுறைப்படுத்த கௌரவ தவிசாளர் அவர்கள் முன்வர வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றேன்.

அத்தோடு ஐக்கிய தேசியக் கட்சியில் நான் சம்மாந்துறையின் அமைப்பாளராக இருக்கின்ற படியினால் எமது நெடுஞ்சாலைகள் அமைச்சர் கௌரவ கபீர் ஹாசிம் சேர் அவர்களைச் சந்தித்து ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன். அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கின்றேன் என்று இந்த சபைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன். இந்த நடவடிக்கைகள் உண்மையில் நான் அமைப்பாளராக இருப்பதால் இறக்காமத்திற்கும் இவ்வாறான சில வேலைத்திட்டங்களை சிறப்பாக மேற்கொள்வதற்கு இறக்காகம பிரதேச சபையின் தவிசாளர் கௌரவ கலீலுல் றஹ்மான் அவர்களும் என்னுடன் தொடர்பு பட்டுக் கூறியிருக்கின்றார். நாவிதன்வெளி பிரதேச சபையிலும் அங்கிருக்கின்ற பிரதேச சபை உறுப்பினர்கள் என்னுடன் தொடர்பு பட்டிருக்கின்றனர்.

எனவே, சம்மாந்துறைத் தொகுதிக்கும் நான் செயலாற்ற வேண்டியிருக்கின்றது. என்னைப் பொறுத்தமட்டில் சம்மாந்துறையை அழகு படுத்த வேண்டும் அதற்காக எமது சபையின் தவிசாளர் அவர்களின் ஒத்துழைப்பையும் எதிர்பாக்கின்றேன். அத்தோடு கௌரவ உப தவிசாளர் அவர்கள் உண்மையில் அவரது கிராமத்திற்கு தேவையான அத்தியவசியமான பொதுச் சந்தை, மலசலகூடம், என்பவற்றைக் கூறுகின்றார். அவருக்கு நான் வாழ்த்து தெரிவித்துக் கொள்கின்றேன். ஆனால் சம்மாந்துறை என்பது சனத்தொகை கூடிய கிராமமாகும். 36க்கு மேற்பட்ட கிராம சேவகர் பகுதியையும் கொண்டதாக இருக்கின்றது. சம்மாந்துறை வரலாற்றைப் பார்க்கின்ற போது, கல்முனை சென்று கரத்தைகளில் பொருட்களைக் கொண்டுவந்து இங்கு வியாபாரம் செய்கின்ற நிலை தொடர்ந்து வரக்கூடாது என்பது சம்மாந்துறை மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்ற படியால், உப தவிசாளர் எடுத்திருக்கின்றதைப் போன்று நல்லதொரு வாராந்த ஞாயிற்றுக் கிழமை சந்தை எமது உரின் செந்நெல் கிராமத்தில் உள்ள இடத்தில் வாராந்த சந்தை நடைமுறைப்படுத்துவதற்கும், இன்னும் அது போன்ற செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பது, நமது சபை உறுப்பினர்களின் கடமையாக இருக்கின்றது. இதனையும் எனது பிரேரனையாக முன்வைக்கின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, சிலர் என்னிடம் கூறுகின்றார்கள் நீங்கள் பேசுவதற்கு மிக நீண்டநேரம் எடுக்கின்றீர்கள். நீண்ட நேரம் பேசுகின்றீர்கள் என்று கூறுகின்றார்கள். அந்தப் பிரச்சாரத்தை நான் முற்றுமுழுதாக மறுக்கின்றேன். கடந்த அறிக்கையைப் பொறுத்தமட்டில் தபால் திணைக்களத்தைப் பற்றிய பூரண அறிவோடு இருக்கின்றேன். அதனால் விளங்காத்தன்மையில் கதைக்கின்ற உறுப்பினர்களுக்கு விளங்கப்படுத்துவது எனது கடமையாகும். எனது முதலாவது பிரேரனையை இன்றுதான் சமர்ப்பிக்கின்றேன்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. யூசுப் லெப்பை |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர். வளர்மதி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்கள் உள்வாங்க வேண்டிய விடயம் நமது சபையில் பிரேரனைகள் நிறைவேற்றுவதற்கு, அதனை செயற்படுத்தக்கூடிய தன்மை இந்த சபைக்கு இருக்க வேண்டும். வாராந்த சந்தைகள், மின் விளக்குகள், மேம் பாலங்கள் எல்லாவற்றையும் எந்த உறுப்பினர்களும் நிராகரிக்க வில்லை. நிச்சயமாக இவைகள் தேவைப்பட்டவைகள். யதார்த்தம் என்னவென்றால் நாம் எத்தனை பிரேனை வைத்தாலும் அந்தப் பிரேரனையை நிறைவேற்றும் பலம் இந்த சபைக்கு இருக்க வேண்டும்.

தெரு லாம்புகளைப் பொறுத்தமட்டில் பல தடவைகள் பேசப்பட்டிருக்கின்றது. ஆனால் ஒவ்வொரு தெரு லாம்புக்கும் 03 இலட்சம் செலவாகும். அந்த செலவை ஏதாவது அமைச்சு அல்லது நிறுவனம் பாரம் எடுக்குமானால் நிச்சயமாக அதனை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் இல்லை. அதனால் நீங்கள் பிரேரனைகளைக் கொண்டு வரும் போது, அதற்கான நிதியை எப்படித் தேடுவது என்ற கருத்தையும் முன்வைக்க வேண்டும். நீங்கள் சபையில் இருப்பது கௌரவ உறுப்பினர்கள். உங்களின் கட்சியின் பதவிகள் இந்த சபையில் எந்த அழுத்தத்தையும் கொண்டு வராது. ஆனால் அவை இந்தக் கட்சியின் நடவடிக்கைகளை மேம்படுத்துமானால் நிச்சயமாக வரவேற்கத்தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராக, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராக இந்த சபையின் அங்கத்தவர்கள் இருப்பது இந்த சபைக்கும் பெருமை. ஆனால் இந்த சபைக்கும், நமது ஊரக்கும் பிரயோசனமாக இருக்க வேண்டும். நிச்சயமாக இந்தத் திட்டங்கள் அதாவது மேம்பாலம், தெரு லாம்புகள், வாரச்சந்தை, LED லாம் போன்றவற்றை இந்த சபை ஏற்றுக் கொள்கின்றது. ஏற்றுக் கொண்டும் இருக்கின்றது. இதற்கு பணம் ஒதுக்குவது யார்? என்ற நடைமுறைச் சிக்கல் இருக்கின்றது. பண ஒதுக்கீடுகளை நாம் கொண்டு வருவோமானால் நிச்சயமாக செய்யலாம் உங்களுக்குத் தெரியும். நமது கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் MIM. மன்சூர் அவர்கள் சம்மாந்துறையில் பஸ் தரிப்பு நிலையத்திற்கு நகர திட்டமிடல் அமைச்சுக்கு இந்த சபை மூலமாக

ஒரு முன்மொழிவை செய்யப்பட்டது. ஆனால் அது இன்னும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அனுமதிக்கப்படவில்லை. அனுமதிக்கப்பட்டு 128 Million பணம் ஒதுக்கப்படுமானால் நிச்சயமாக அந்தத் திட்டம் நிறைவேறும்.

உங்களுக்கு வரவு செலவுத் திட்டத்தின் பிரதி இருக்கின்றது. இந்த சபையின் வருமானம் என்ன? செலவீனங்கள் என்ன? மூலதனச் செலவுக்கு எவ்வளவு ஒதுக்கியுள்ளோம். அதில் இருந்து என்ன செய்யலாம் என்பதுதான் சபையினால் செய்யக்கூடிய விடயங்கள். மற்ற அனைத்தும் முன்மொழிவுகளுடன் சேர்ந்து நிதித் திட்டமும் வர வேண்டும். அவ்வாறு வரும் போது நிச்சயமாக ஆக்க பூர்வமான முன்மொழிவாக இருக்கும்.

ஒரு பாலர் பாடசாலையை எடுத்து பராமரிப்பது என்பது ஒரு விடயம். நமது வரவு செலவுத் திட்டத்தில் இதற்கு ஒதுக்கீடு இருக்குமானால் அதனைச் செய்யலாம். ஆனால் இலட்சக்கனக்கில் அல்லது கோடிக்கனக்கில் செய்வதற்கு இந்த சபையில் வருமானம் இல்லை. உங்களுக்குத் தெரியும் நமது சபை இன்றும் இயங்குவது சென்ற சபை சேமித்து வைத்த பணத்தில். சென்ற சபையில் ஒவ்வொரு திட்டங்களையும் செயற்படுத்தும் போது 100 வீதம் சபைக்கு நிர்வாகச் செலவு தரப்பட்டது. ஆனால் 03 அல்லது 04 வருடங்களாக பல அமைச்சுக்களின் சேவைகள் சபை மூலம் நடந்திருக்கின்றது. ஒரு பணமும் இந்த திட்டங்களில் இல்லை. நிர்வாகச் செலவு இல்லாமல்தான் அனைத்து சேவைகளும் செய்யப்படுகின்றது. அவர்கள் கூறுகின்றார்கள் உங்களின் சொத்தின் பெறுமானத்தை நாங்கள் உயர்த்துகின்றோம். அது நியாயமான விடயம்தான். ஆனால் வருமானம் இல்லை. வருமானத்தைக் கூட்டும் முயற்சி நமக்கு இருக்க வேண்டும். அந்த முன்மொழிவு சபைத் தீர்மானமாக எடுத்து அந்தத் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு இந்த ஆட்சியின் பங்காளர்கள் முயற்சிகளை எடுக்க வேண்டும். என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது சபையின் பிரதிநிதி இந்த நாட்டில் ஆட்சி செய்து கொண்டிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் சம்மாந்துறை அமைப்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தற்போது தெரிவித்தார். அவர் உண்மையாக அமைப்பாளராக தெரிவு செய்யப்பட்டிருந்தால் சபை சார்பாக நாங்கள் அவருக்கு மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதே போன்று சம்மாந்துறை மன்னுக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர் நியமிக்கப்பட்டுள்ளார் உண்மையில் அந்தப் பாராளுமன்ற உறுப்பினருக்கும் அவர் சம்மாந்துறை பிரதிநிதி என்ற வகையில் அவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

சம்மாந்துறையில் இலங்கை நிர்வாக சபையின் சிரேஸ்ட்ட உத்தியோகத்தர் ஒருவர் வவுனியா மாவட்டத்தின் அரசாங்க அதிபராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். உண்மையில் அதுவும் இந்த மண்ணுக்குப் பெருமை. அவருக்கும் நமது சபை வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம். நன்றி!

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சம்மாந்துறைப் பிரதேசத்தில் பிறந்து வளர்ந்து நமது ஊருக்கு நிர்வாக சேவையில் பெருமை தேடித்தந்து இன்னும் நமது நாட்டின் சரித்திரத்தில் முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த 03 வது அரச அதிபர் அந்தஸ்து பெற்றிருக்கும் நமது சகோதரர் Mr ஹனீபா அவர்களை இந்த சபை பாராட்டுகின்றது. வாழ்த்துகின்றது. என்ற செய்தியை உத்தியோக பூர்வமாக அறிவிக்கும்படி சபையின் செயலாளருக்கு ஆனையிடுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஆர் வளர்மதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த காலங்களில் சம்மாந்துறை டிப்போவில் இருந்து மஜீட்புரம் ஊடாக காலை 07 மணி அளவில் பஸ்கள் போக்கு வரத்து செய்யப்பட்டது. பின்னர் அது

தடைசெய்யப்பட்டுள்ளது. அதற்கான காரணம் எனக்குத் தெரியவில்லை. காலையில் மஜீட்புர மாணவர்கள் சம்மாந்துறையில் உள்ள பாடசாலைக்கு செல்வதற்கு பல சிரமங்களை மேற்கொள்கின்றனர். காரணம் காலையில் ஆட்டோவில் மல்வத்தை சந்திக்கு வருவதற்கும் பாடசாலை முடிந்து மல்வத்தைச் சந்தியில் இருந்து மஜீட்புரத்திற்கு ஆட்டோவில் செல்வதற்குமாக ஒரு நாளைக்கு மாணவர்களுக்கு 300 ரூபா பணம் தேவைப்படுகின்றது. அது மாத்திரமல்லாமல் சந்தைகளுக்குச் செல்பவர்கள், வைத்திய சாலைக்குச் செல்பவர்களும் கூட சிரமப்படுகின்றார்கள். அதனை மையமாகக் கொண்டு அவர்களது பிரச்சினையை போக்க வேண்டும். அது மாத்திரமல்லாமல் கனபதி புரத்தில் உள்ள மக்களும் போக்குவரத்துக்காக மிகவும் சிரமப்படுகின்றார்கள். கௌரவ தவிசாளர் அவர்களே, மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, கடந்த காலங்களில் போக்கு வரத்து சம்மாந்துறை டிப்போவில் இருந்து காலை 07 மணிக்கு மஜீட்புரத்தில் அந்த பஸ் நிறுத்தப்பட்டு காலை 07.15 க்கு சம்மாந்துறை ஊடாக கல்முனை டிப்போவுக்கு போக்குவரத்து செய்யப்பட்டது. அது தடைசெய்யப்பட்டுள்ளது. அதனை மீண்டும் பெற்றுத்தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் வளர்மதி அவர்கள் கூறியது போன்று பஸ் சேவை மிகவும் நல்ல விடயம். இது சம்மாந்துறை பௌஸ் மாவத்தை ஊடாக செந்நெல்புரமூடாகத்தான் சென்றது. ஆனால் பஸ் தொடர்ந்து செல்ல வேண்டும் என்று பல கடிதங்கள் கொடுத்தும், பாதை விபத்து காரணமாக Traffic போடுவது பிரச்சினை காரணம் என்று கூறி அதனை 02, 03 தடவைகள் தடுத்துவிட்டார்கள். மீண்டும் அதனை சம்மாந்துறை பௌஸ் மாவத்தை ஊடாக மஜீட்புரத்திற்கு போய் வருவதற்கு நீங்கள் ஆவன செய்வது நன்று என்று எதிர்பார்க்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இதில் இருக்கின்ற நடைமுறைச் சிக்கல் இலங்கை போக்கு வரத்து சபை ஊழியர்கள் வருமானம் திரட்டாவிட்டால் அவர்களுக்கு சம்மளம் வழங்குவது கடினமான விடயமாக இருப்பதும், நஸ்ட்டப்படும் Route களில் பஸ்களைப் பாவிப்பதனை தவிர்த்து வருகின்றார்கள். நான் உத்தியோக பூர்வமாக அவர்களிடம் கேட்டுக் கொண்டது அப்படியான சேவைகள் நடத்துவதனால் அவர்களுக்கு ஏற்படும் நஸ்ட்டத்தை நமக்கு அறிவிப்பார்களானால் நாம் எவ்வளியில் அவர்களுக்கு உதவி செய்து இந்த சேவையை நடாத்துவதற்கு அவர்கள் முன்வர வேண்டும் என்று. மிக விரைவில் அதற்கு மறுமொழி வரும். அப்படி வரும்போது நிச்சயமாக செய்யலாம். இல்லாவிடில் கௌரவ போக்குவரத்து அமைச்சரின் கட்டளையை அவர்களுக்குப் பிரப்பித்தால்தான் அந்த விடயம் நடைமுறைப்படுத்தக்கூடிய சாத்தியம் இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர்கள் வளர்மதி, சரீபா அவர்களது வேண்டுகோள்களுக்கு என்னைப் பொறுத்தமட்டில் இதனை நான் கூறவேண்டும். சபை இதனை செலுத்த முடியாவிட்டால் பஸ்சுக்கான கட்டனத்தை தபால் திணைக்களம் செலுத்தகூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. வண்டு வாய்கால் சந்தியில் சம்புமடு உப அஞ்சல் அலுவலகம் அஞ்சல் அலுவலகமாக தரம் உயர்த்தப்பட்டு அவ்விடத்தில் நிறுவப்படுமானால் காலையிலும் மாலையிலும் தபால் எடுத்து அம்பாரைக்குச் செல்லும் பஸ் அம்பாரையில் இருந்து தபாலைக் கொண்டுவரும் பஸ்சும் ஒரு நாளைக்க 02 தடவையாவது நிச்சயமாக செல்லும். அதற்குரிய போக்கு வரத்திற்கான கட்டனத்தை தபால் திணைக்களம் செலுத்துவது வழக்கம். ஆகவே, அவ்வாறான நிலை இந்த சபைக்கு ஏற்படாது என நினைக்கின்றேன். முடிந்தளவு தபால் திணைக்களத்தோடு அதற்குரிய நடவடிக்கையை நான் தொடர்ந்து முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் சரீபா அவர்கள் கூறிய எல்லைக்குள் பஸ் போகும் போது நாம் கட்டனம் செலுத்த வேண்டிய அவசியம் வராது என்று நான் நினைக்கின்றேன்.

காரனம் அது சனச்செறிவு கூடிய பிரதேசம் பிரதேசம் என்பதனால் அதற்கு வராது. அதற்கு அப்பால் செல்வதற்குத்தான் நமது சபை கட்டனம் செலுத்த வேண்டி வரும் என்பது எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் இன்பவதி அவர்கள் கூறிய பனஓலைக் கைத்தொழில் தொடர்பாக நமது வர்த்தக கைத்தொழில் அமைச்சுக்கு அனுப்பி அதற்குரிய நடவடிக்கையை முன்னெடுப்போம்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் வளர்மதி அவர்களின் முன்மொழிவான மஜீட்புரம் பஸ் சேவையானது விசேடமாக கல்முனையில் இருந்து பஸ் சம்மாந்துறை, மல்வத்தை, மஜீட்புரம் ஊடாக மத்திய முகாம் ஊடாக சென்று, அதனைப் போன்று அம்பாரையில் இருந்து ஒரு பஸ் மல்வத்தை மத்திய முகாம் வரை சென்று வந்தால் அதற்கு போதுமான வருவாய் ஈட்டக்கூடிய சந்தரப்பம் இருக்கின்றது. எனவே அதற்குரிய விடயங்களை நாம் சபையினூடாக அதற்குரிய வேண்டுகோள்களை, சிபார்சை எங்களது இலங்கை போக்கு வரத்து சபை கல்முனை பிராந்திய காரியாலையத்திற்கு அனுப்பி வைப்பது சிறந்ததாக இருக்கும் என நான் கருதுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த சபையின் நடவடிக்கைகள் இனிதே முடிகின்றது.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.

அதுபோல் நாம் ஒவ்வொரு திட்டமும்